மே 2008 May | இதழ் 208 ISSUE

# தமிழர் தகவல்

# TAMILS' INFORMATION

இந்த மாதம் தெற்காசிய பண்பாட்டு மாதம்

On behalf of
the **Ontario Liberal Caucus**
best wishes to the community on the occasion of

South Asian Heritage Month



Growing with the Community ESTD-1991

இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி
a monthly information digest

18 வது ஆண்டில் th Year

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஸ்தாபிதம்
பெப்ரவரி 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

தொலைபேசி
416 920 9250
தொலைநகல்
416 921 6576

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்,
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
றஞ்சி திரு

உதவி ஆசிரியர் &
தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
அன்ரன் கனகசூரியர்
குயின்ரஸ் துரைசிங்கம்

பொது முகாமையாளர்
எஸ். ரி. சிங்கம்

விநியோக முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
இ. சிவலிங்கம்
எஸ். திருமுருகா
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்
என். குமாரதாஸன்
நா. விமலநாதன்

தொழில்நுட்ப உதவி
ஹரன் கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

ஆசிரியரிடமிருந்து **From the Editor**

## சட்டம் தீட்டும் திட்டம்

கனடியப் பத்திரிகைகளில் தினசரிச் செய்தியாகவும், விவாதப் பொருளாகவும் அமைந்திருப்பது புதிய குடிவரவுச் சட்டம். கண்டனம், ஆர்ப்பாட்டம், எதிர்ப்பு அரங்கம் என்று ஒவ்வொரு நாளும் இச்சட்டத்தற்கு எதிராக நிகழ்வுகள் இடம்பெறுகின்றன.

மக்களின் வலுவான எதிர்ப்புக் காரணமாக குடிவரவு அமைச்சர் டயான் பின்லேக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பினை ஹாப்பர் அரசு அதிகரித்துள்ளது.

ஒரு அமைச்சரின் மெய்ப்பாதுகாப்புக்கே அபாயமென எண்ணுமளவுக்கு, புதிய குடிவரவுச் சட்டம் பாதகமான ஒன்றா? அப்படித்தான் எதிர்க்கட்சியினர் சொல்கின்றனர்; குடிவரவு வழக்கறிஞர்களும், அகதிகளுக்குச் சேவை புரியும் அமைப்புகளும் அப்படித்தான் சொல்கின்றன; இனக் குழுமங்களும் அப்படியே சொல்கின்றன!

புதிதாக வரவுள்ள மாற்றங்கள் ஒருபுறமிருக்க, புதிய சட்டம் அரசியல் மயப்படுத்தப்பட்டு, குடிவரவு அமைச்சருக்குச் சகல அதிகாரங்களும் கையளிக்கப்படுவதாக இருப்பதையே பலரும் சுட்டிக்காட்டி வருகின்றனர்; இதனாலேயே எதிர்ப்பு அதிகமாகியுள்ளது.

கனடாவுக்கு வர விண்ணப்பிப்பவர்களில் எவரொருவரையும் தமது விருப்புக்கு ஏற்ப அமைச்சர் தெரிவு செய்ய அதிகாரம் வழங்கும் புதிய சட்டம் மிகவும் அபாயமானது என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாதிடுகின்றனர்.

ஏற்கனவே தேக்க நிலையிலுள்ள 925,000 நிரந்தரக் குடியுரிமைக்கான விண்ணப்பதாரிகள் இந்தப் புதிய நடைமுறையினால் பெரிதும் பாதிக்கப்படப் போகின்றனர் என்ற பொதுவான குற்றச்சாட்டை, 'இல்லை' என்று மறுத்துக் கூற முடியாத நிலையில் ஹாப்பர் அரச தரப்பினர் உள்ளனர்.

நிராகரிக்கப்பட்ட அகதிகள் மனிதாபிமான கருணை அடிப்படையில் மேன்முறையீடு செய்யும் வாய்ப்பும் புதிய சட்டத்தின்கீழ் இல்லாமற் போகின்றது.

அதேசமயம், வேகப்பாதை (Fast track) என ஒரு முறைமை ஏற்படுத்தப்பட்டு, அவ்வழிக்கு அதிக முன்னுரிமை கொடுத்து பலருக்கு வேகமாக 'விசா' வழங்கும் முறை, அரசியல் கலந்ததாக அமையுமென்று எதிர்க்கட்சிகள் சாடியுள்ளன.

புதிய குடிவரவுச் சட்டம் 'இனவாத' நோக்குடன் செயற்பட உருவாக்கப்பட்டது என்று எவராவது சொன்னால், அதில் உண்மை இல்லாமலிருக்க முடியாது. புதிய சட்டத்தை முறியடிக்கும் பலம் நாடாளுமன்றத்தில் லிபரலிடம் உண்டு.

இதனை லிபரல் செய்யத் தவறுமானால், மக்களின் வாக்கை எதிர்காலத்தில் பெறத் தவறுவார்கள் எனப் பகிரங்க எச்சரிக்கை வந்துள்ளது.

உட்கட்சி மோதலால் ஏற்கனவே 'ததிகிணதோம்' போடும் லிபரல் கட்சிக்கு இது ஒரு 'சீரியசான' எச்சரிக்கை. எப்படித்தான் நிலைமையை லிபரல் கையாளப் போகின்றதோ?

திரு எஸ். திருச்செல்வம்

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

Established
February 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

Tel: 416 920 9250
Fax: 416 921 6576

email
tamilsinfo@sympatico.ca

Produced by
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

Published by
Ahilan Associates

Editor in chief
Thiru S. Thiruchelvam

Associate Editor
Ranji Thiru

Assistant Editor and Production Manager
Sasi Pathmanathan

Assistant Editors
Anton Kanagasooriyar
Quintus Thuraisingam

General Manager
S.T. Singam

Circulation Manager
R. R. Rajkumar

Public Relation
R. Sivalingam
S. Thirumuruga
P. Sivasubramaniam
Pon. Sivakumaran
N. Kumaradasan
N.Vimalanathan

Technical Support
Haran Graph

Monthly
5000 Copies

Annual
6000 Copies



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய குடிவரவுச் சட்டத்துக்கு எதிர்ப்பு அதிகரிப்பு! குடிவரவு அமைச்சருக்குப் பாதுகாப்பு அதிகரிப்பு!!

கனடிய மத்திய அரசினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள புதிய குடிவரவுச் சட்டத்துக்குப் பலமான எதிர்ப்பு பல கோணங்களிலிருந்தும் அதிகரித்து வருகின்றது. ஆளும் கன்சர்வேடிவ் கட்சிக்கு அரசியல் ரீதியாகச் சகல அதிகாரங்களையும் வழங்கும் வகையில் புதிய சட்டம் இருப்பதாகவும், குடிவரவு அமைச்சருக்கு வானளாவிய அதிகாரம் கிடைப்பதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்தப் புதிய சட்டத்தினை நாடாளுமன்றத்தில் லிபரல் கட்சியினர் எதிர்த்து வாக்களிக்க வேண்டுமென்றும், தவறினால் லிபரல் கட்சிக்கு எதிராகவே தங்கள் வாக்குகள் அளிக்கப்படும் என்றும் மக்கள் குழுக்கள் பகிரங்கமாகத் தெரிவித்து வருகின்றன. இதற்கான கூட்டங்களும் லிபரல் நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொகுதி அலுவலகங்களின் முன்னால் நடைபெற்று வருகின்றன.

நாடளாவிய ரீதியில் புதிய சட்டத்துக்கு எதிராக நடத்தப்படும் ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், கண்டனக் கூட்டங்களின் வலுவினைக் கருத்தில் கொண்டு, கனடியக் குடிவரவு அமைச்சர் டயான் பின்லேக்கான பாதுகாப்பு மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. எவ்வகையான அச்சம் இவருக்கு இருப்பதென அறிவிக்கப்படவில்லை ஆயினும், இவருக்கு எவராவது ஏதாவது செய்யக் கூடுமென்று பாதுகாப்பு வட்டாரங்கள் கருதுகின்றன.

'மசோதா சி-50' என்னும் புதிய குடிவரவுச் சட்ட மூலம் ஏற்படுத்தவுள்ள பாதகமான விளைவுகளாகச் சிலவற்றை அக்கறையுள்ள அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன. இவற்றுள் நான்கு முக்கியமானவை.

* நிராகரிக்கப்படும் அகதிகள் அப்பீல் மனு முறை முற்றாக ஒழிக்கப்படுகின்றது. மனிதாபிமான கருணை அடிப்படையில் ஒருவர் ஏற்கப்படுவதை இது தடுக்கிறது.
* நாடு, தொழில், அவரது பின்னணி ஆகியவற்றுக்கு அப்பால் சென்று நீதியான முறையில் ஒருவர் விசாரணை செய்யப்படுவது இல்லாமற் செய்யப்படுகிறது.
* வருடாந்தம் ஏற்கப்படும் குடிவரவாளர் தொகை குறைக்கப்படுகிறது.
* கனடாவுக்கு எவரை அனுமதிப்பது என்ற முடிவை அமைச்சரே எடுக்க அனுமதி வழங்குவது.

இதன் காரணமாக ஏற்கனவே தேக்க நிலையிலுள்ள சுமார் 925,000 விண்ணப்பங்களும் கிடப்புக்குள் தள்ளப்படப் போகின்றன என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

## சர்வதேச மாணவர் வேலை அனுமதியில் பாரிய மாற்றங்கள் அறிமுகம்

## Government introduces changes to work permits for international students

சர்வதேச மாணவர்களுக்கான வேலை அனுமதிப் பத்திரம் வழங்கும் முறையில் சில மாற்றங்களைக் கனடிய அரசு கொண்டு வந்துள்ளது. கனடாவில் வேலைகளுக்கு மேலதிக கவர்ச்சியை அளிக்கும் வகையில் இந்த மாற்றங்கள் அமைந்துள்ளன.

இவற்றுள் முக்கியமான ஒன்றாக இந்த மாணவர்களுக்குத் 'திறந்த வேலை அனுமதிப் பத்திரம்' வழங்கப்படும். இதற்கு முன்னர், குறிப்பிட்ட வேலைகளை மட்டுமே இவர்கள் செய்வதற்கு அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டு வந்தது.

வேலை அனுமதிப் பத்திரக் காலாவதிக் காலமும் மூன்று வருடங்களாக உயர்த்தப்படுகின்றது. இதற்கு முன்னர் இந்தக் காலம் ஒன்று அல்லது இரண்டு வருடங்களாகவே அமைந்திருந்தது.

வெளிநாடுகளிலிருந்து இங்கு வருகை தரும் மாணவர்களுக்கானதாக இந்தத் திட்டம் அமைந்துள்ளதால், மாற்றம் தொடர்பான முழு விபரங்களையும் கீழே ஆங்கிலத்தில் தருகின்றோம்.

Government of Canada introduces changes to work permits for international students, making Canada more attractive for skilled individuals

Diane Finley, Minister of Citizenship and Immigration, last month announced changes to work permits for international students who graduate from eligible programs at certain Canadian post-secondary institutions, making it easier to attract foreign students to Canada.

Effective immediately, and for the first time, these international students would be able to obtain an open work permit under the Post-Graduation Work Permit Program, with no restrictions on the type of employment and no requirement for a job offer.

In addition, the duration of the work permit has been extended to three years across the country. Previously, the program only allowed international students to work for one or two years, depending on location.

"The Government of Canada wants more foreign students to choose Canada and we want to help them succeed," said Minister Finley. "Open and longer work permits provide international students with more opportunities for Canadian work experience and skills development. This will, in turn, help make Canada a destination of choice, and help us keep international students already studying in Canada."

The increased flexibility offered by the expanded program will benefit graduates and employers alike as the program will help international students get important work experience while responding to Canada's labour market needs.

Canada will benefit in the long run as the professional experience gained will help graduates meet the requirements to stay permanently in Canada.

"As we move toward the implementation of the Canadian Experience Class, these changes will help create a pool of individuals who, with work experience, will find it easier to apply to immigrate to Canada," added Minister Finley.

"Our ability to retain international graduates with Canadian qualifications, work experience and familiarity with Canadian society, will help increase our competitiveness and benefit Canada as a whole."

The Post-Graduation Work Permit Program allows students who have graduated from an eligible program at a post-secondary institution to gain valuable Canadian work experience.

Preliminary 2007 data indicate that 63,673 international students came to Canada that year, representing a 4.6 percent increase over the previous year.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். சண்முகராஜா
RN, Dip. Nursing Ed.

# சர்க்கரையோடு எச்சரிக்கை தேவை-2

நீரிழிவு நோய்க்கு நிரந்தரமாய்த் தீர்வில்லைச்
சீரழிவே யென்றுசிந்தை சோர்ந்துவிடிற் - பேரழிவே
உண்டி உடற்பயிற்சி யோடே உடல்மெலிந்தாற்
கண்டிடலாம் காணாச் சுகம்

சென்ற மாத இதழிலே நீரிழிவு நோய் பற்றியும் அதன் வகைகள், அறிகுறிகள், நோயைக் கண்டுபிடிப்பதற்கான பரிசோதனைகள் என்பவை பற்றியும் எழுதியிருந்தேன். நீரிழிவு நோயைவிட அதனால் ஏற்படக்கூடிய சிக்கல்கள்தான் ஒருவரின் உடல் நலத்தையும் உயிர்வாழ்வையும் பெரிதும் பாதிக்கின்றதென்பதையும் நீரிழிவு நோயை நிரந்தரமாகக் குணமாக்க முடியாதெனினும் அதனைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதன் மூலம் சிக்கல்களைத் தவிர்த்து நீண்ட நாட்கள் நலமாக வாழலாம் என்பதையும் மீண்டும் வலியுறுத்த வேண்டியது அவசியம் என நினைக்கிறேன்.

நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவதென்பது நோயாளிகள் தமது குருதியிலுள்ள குளுக்கோசின் அளவை ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் வைத்துக்கொள்வதாகும். குருதியிலுள்ள குளுக்கோசின் அளவின் வரையறை எவ்வளவு என்பதையும் அதனை அறிந்து கொள்ளும் முறை பற்றியும் இனிவரும் இதழ்களில் கவனிப்போம். நோயைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகளில் தேவைக்கேற்ப மருத்துவ முறைகளை அனுசரிப்பதுடன் நாளாந்த வாழ்க்கை நடைமுறையில் நான்கு அம்சங்களில் மாற்றங்களைக் கொண்டுவருவது இன்றியமையாததாகும். ஆரோக்கியமான உணவுப் பழக்கவழக்கம், ஒழுங்கான உடற்பயிற்சி, அதிகரித்த உடற்பருமனைக் குறைத்து சரியான உடல் நிறையைப் பேணுதல், சிகரட் புகைக்கும் பழக்கம் இருப்பின் அதனைக் கைவிடுதல் ஆகியனவே இந்த நான்கு அம்சங்களுமாகும்.

**ஆரோக்கியமான உணவுப் பழக்க வழக்கம்**
நீரிழிவுக்கான சிகிச்சையில் உணவு ஒரு முக்கிய அம்சம் என்ற காரணத்தால் இக்கட்டுரையில் நீரிழிவு நோயாளருக்கேற்ற உணவு சம்பந்தமான தகவல்களைப் பகிர்ந்து கொள்ள விழைகின்றேன் . சில நோயாளரில் மருந்து மாத்திரைகளின்றி தனியே நல்ல உணவுக் கட்டுப்பாட்டினாலும் உடற்பயிற்சியினாலும் நீரிழிவு நோயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரக்கூடியதாக இருக்கிறது என்பதை நாம் கவனத்தில் கொள்வது நல்லது.

நீரிழிவு நோயாளியின் உணவு விடயத்தில் 3 விடயங்கள் கவனிக்கப்பட வேண்டும்.
**அளவான உணவு** - உண்ணும் உணவின் அளவு குறிப்பாக காபோகைட்ரேட் (carbohydrates) எனப்படும் சீனிச் சத்துக்கள் அல்லது மாச்சத்துக்கள் அடங்கிய உணவின் அளவு கட்டுப்படுத்தப்பட வேண்டும். இதன் கருத்து காபோகைட்ரேட் வகை உணவுகளை முற்றாக விலக்க வேண்டுமென்பதில்லை. அதன் அளவைக் கட்டுப்படுத்துவது மட்டுமே. அதேவேளை காபோகைட்ரேட் மிகச் செறிவாகவுள்ள இனிப்புப் பதார்த்தங்கள், கேக், சாக்லேட், உருளைக்கிழங்கு சிப்ஸ் (chips) போன்ற உணவுவகைகளைத் தவிர்ப்பது அல்லது மிகக்குறைந்த அளவுக்கு மட்டுப்படுத்துவது நன்று.

**தரமான உணவு** - முழுத்தானிய உணவு வகைகள், காய்கறி உணவுகள், பருப்புவகைகள், பழங்கள் போன்ற நார்ப்பதார்த்தங்கள் (fibers) செறிவாக உள்ள உணவுகளை அதிக அளவில் சேர்த்துக்கொள்வது நல்லது. நார்ப்பதார்த்தங்கள் காபோகைட்ரேட் சமிபாடடைவதையும் அது குருதியினால் உறிஞ்சப்படுவதையும் தாமதப்படுத்துவதனால் குருதியிலுள்ள குளுக்கோசின் அளவைக் கட்டுப்படுத்த உதவுகின்றன. தவிர கொழுப்பு இதயத்தில் பாதிப்பை ஏற்படுத்துவதாலும், உடற் பருமனை அதிகரிக்கும் என்பதாலும் கொழுப்பு உள்ள உணவுகளின் அளவையும் மட்டுப்படுத்த வேண்டியது அவசியம்.

**3 வேளை உணவு** - ஒரு நாளைக்கு காலை, மதியம் இரவு என 3 வேளை உணவாக உண்ணும் பழக்கத்தை வைத்திருப்பது சிறந்தது. ஒவ்வொரு நாளும் உணவு உட்கொள்ளும் பழக்கத்தை ஒரு குறிப்பிட்ட நேரத்துக்கு ஒழுங்காக வைத்திருக்க வேண்டும். இரண்டு உணவு வேளைகளுக்கு இடையிலே 4 லில் இருந்து 6 மணிநேர இடைவெளி இருக்க வேண்டியதும் அவசியம்.
3 வேளை உணவுக்கு இடையே சிறிய அளவு சிற்றுண்டி உட்கொள்வது நல்லது. இது குறிப்பாக இன்சுலின் அல்லது நீரிழிவு மாத்திரைகள் பாவிக்கும் நோயாளருக்கும் கடுமையான உடல் உழைப்பில் ஈடுபடும் நோயாளருக்கும் மிக அவசியமாகும்.

**பொருத்தமான உணவைத் தேர்ந்தெடுத்தல்**

**காய்கறி உணவு வகைகள்**
காய்கறிகளில் உயிர்ச்சத்துக்கள், தாதுப்பொருட்கள் போன்ற அவசியமான சத்துக்களும் நார்ப்பதார்த்தங்களும் மிகச் செறிவாகக் காணப்படுகின்றன. உருளைக்கிழங்கு, வத்தாழங் கிழங்கு, சோளம், பச்சை பீஸ் (green peas) போன்ற சில தாவர உணவுவகைகளைத் தவிர ஏனைய காய்கறி வகைகளை மட்டுப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை, தாராளமாக உட்கொள்ளலாம்.

**பழங்கள்**
காய்கறிகளைப் போன்று சத்துணவாக இருந்த போதிலும் பழங்களில் அதிக அளவு காபோகைட்ரேட்ஸ் காணப்படுகின்றன. எனினும் அவற்றில் நார்ப்பதார்த்தங்கள் அதிகம் காணப்படுவதால் அவற்றிலுள்ள காபோகைட்ரேட்டுக்கள் குருதியினுள் உறிஞ்சப்படுவது குறைக்கப்படுகிறது. பழங்களை 3 வேளை உணவுடனோ அல்லது சிற்றுண்டி நேரத்திலோ சேர்த்துக்கொள்வது நல்லது. பழரசமானால் ஒரு நாளைக்கு ஒரு கிளாஸ் மட்டும் எடுத்துக்கொள்ளலாம்.

**தவிட்டோடு கூடிய தானிய உணவுவகைகள் (whole grain products)**
இவற்றிலும் நார்ப்பதார்த்தங்கள் நிறைய இருக்கின்றன. 3வேளை உணவிலும் தவிட்டோடு கூடிய முழுத் தானியங்கள் அல்லது அவற்றின் மாவினால் தயாரிக்கப்பட்ட சோறு, ரொட்டி, பாஸ்ரா (pasta) போன்ற உணவுகளை ஓரளவு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

**பாலுணவு**
ஒரு நாளைக்கு இரண்டு தடவைகள் பால் அல்லது பாலுணவு எடுத்துக்கொள்ளலாம். 1 வீதம் அல்லது அதற்கு குறைவான பாற்கொழுப்படங்கிய பாலை அல்லது தயிரைப் பாவிக்கலாம். ஐஸ் கிறீம், புடிங் (pudding) போன்ற பால் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட இனிப்பு செறிவாக உள்ள உணவுகளை இயலுமான அளவு தவிர்த்தல் நன்று.

**புரத உணவு**
இறைச்சி, மீன் போன்ற மாமிச உணவுகள் புரதச் சத்து அடங்கியவை. அவற்றில் மாச்சத்து சீனிச்சத்து ஆகியவை மிகக்குறைவு. ஆனால் மாமிச உணவுகளிலுள்ள கொழுப்பையிட்டு அவதானமாக இருக்க வேண்டும். மீன், தோல் நீக்கப்பட்ட கோழி இறைச்சி, பருப்பு, விதைகள், 20வீதம் அல்லது அதற்கு குறைவான கொழுப்படங்கிய பாலாடைக்கட்டி (cheese) போன்ற ஏதாவது புரத உணவுகள் நாளாந்த உணவிற் சேர்க்கப்பட வேண்டும். மற்ற இறைச்சி வகைகள் பாவிக்கும் போது கொழுப்பு நீக்கப்பட்ட இறைச்சியை (lean meat) தேர்ந்தெடுப்பது நல்லது.
(31ம் பக்கம் வருக)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர் தகவல் மீதான ஒரு பார்வை

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் எங்கள் தாய் நாட்டிலிருந்து தமிழ் மக்கள் புலம் பெயர்வு ஏற்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்ட பொழுது கனடிய அரசாங்கம் எல்லா வசதிகளையும் கொடுத்து இரு கரம் கூப்பி அழைத்து இடம் கொடுத்தது. இருந்தும் முற்றாக வேறுபட்ட சூழல் காரணமாக எமது மக்கள் பல கஷ்டங்களை அனுபவித்து வந்தார்கள்.

அந்நிலை மாறி இன்றைக்கு எங்கள் மக்களுக்குக் கனடா இரண்டாவது வாழிடமாக மாறியிருப்பதை எவரும் மறக்க முடியாது. இந்நிலையை அடை-வதற்கு ஒரு சிலர் காரணமாக இருந்தாலும் இவர்களின் ஒரு பங்கு மிகவும் அளப்பரியது. ஒரு சிலர் தங்கள் கஷ்டங்களைத் தாமே சமாளிக்கும் இயல்பினைக் கொண்டிருந்தார்கள். ஆனால் பெரும்பாலோர் வேறுபட்ட சூழ்நிலையில் அரசாங்கங்களைப் புரிந்து கொள்ளவோ அல்லது புரிந்து செயல்படவோ இயலாதவர்களாகத் தவித்திருக்கின்றார்கள். இவர்களிடத்தில் தன்னை வைத்துப் பார்க்கும் இயல்பினைப் பெற்ற திரு. திருச்செல்வம் 1991ம் ஆண்டு 'தமிழர் தகவல்' என்ற மிகவும் பயனளிக்கும் மாத சஞ்சிகையை ஆரம்பித்து இலவசமாக எங்கள் மத்தியில் உலவச் செய்தார்.

குடிவரவு மக்களாக ஏற்கப்பட்டதும் அவர்கள் ஒவ்வொருவருக்கும் அளிக்கப்படும் வசதிகள், அவர்களின் உரிமைகள் என்ன என்ற உண்மையை உணரச் செய்வதே சிரமமாயிருந்தது. மேலும் இந்த வசதிகளை, அதாவது தங்கள் உரிமைகளைப் பெறுவதற்கு வேண்டிய தகவல்களை இலகுவான, விளங்கக் கூடிய முறையில் 'தமிழர் தகவல்' என்ற சஞ்சிகை வழியாக எல்லோருக்கும் வெளிப்படுத்தினார்.

'தமிழர் தகவல்' என்ற இந்த மாதாந்த சஞ்சிகையை ஆரம்பிப்பதற்கும் அதைத் தொடர்ந்து வெளிவிடுவதற்கும் அவர் தாயகத்தில் பெற்ற பத்திரிகை அனுபவம், அரசியல் பிரமுகர்களின் சகவாசம் ஆகியவற்றினும் மேலாக அவரின் சேவை மனப்பான்மை தான் காரணமாயிருக்க வேண்டும். இச்சேவையிலும் கூட மற்றவர்களின் தேவை அறிந்து செயல்படுதல் அவரின் சிறந்த இயல்பாகும்.

"நற்றாற்ற லுள்ளும் தவறுண்டு அவர்கள்
பண்பறிந்து ஆற்றாக் கடை"

என்ற வள்ளுவர் கூற்று இங்கு பொருத்தமாயிருக்கலாம். அடிப்படைத்



தனா புத்திரசிங்கம் -இங்கிலாந்து

## செயல்நோக்கு ஆற்றலும் செயற்திறனும்

தேவைகள் பூர்த்தியாக மக்கள் புலம்பெயர்ந்த இடத்தில் அமைவதற்கு உதவியாக இருந்த 'தமிழர் தகவல்' சஞ்சிகை படிப்படியாக மக்கள் விருத்திக்குத் தேவையான பல்வேறு கோணங்களில் தொழிற்பட ஆரம்பித்து அது இன்று முற்றாகப் பரிணமித்து ஒரு கல்வி கலாசார ஏடாகத் திகழ்கின்றது. அண்மைக்கால ஆண்டு மலர்கள் இதற்குச் சான்று பகர்கின்றன.

'தமிழர் தகவல்' ஆரம்பித்த காலத்திலிருந்து நானும் எனது பாரியாரும் தொடர்ந்து அதைப் படிப்பதற்கு, மிகவும் ஆழ்ந்த கருத்துக்களை பொருட்சுவை சொற்சுவை மட்டுமல்லாது நகைச்சுவையாகவும் எழுதி வரும் எங்கள் நண்பன் கனகசபாபதி அவர்கள் தவறாது மாதமாதம் தபாலில் அனுப்பி வருகின்றார்.

"திருவின் பலமுறை வற்புறுத்தலின் காரணத்தால்தான் எழுத ஆரம்பித்தேன்" என்று கனகசபாபதி அவர்கள் தனது கட்டுரை ஒன்றில் எழுதியிருக்கின்றார். எழுத்தறிவித்தவன் இறைவன் என்றால், எழுத வைத்தவனை என்னவென்று கூறுவது! இவ்வாறு உறங்கிக் கிடக்கும் பலரது ஆற்றல்களைத் தட்டி எழுப்பி, பலனுடையதாக்கிய பெருமை திருவுக்குச் சேரும். இதன் பிரதிபலிப்பாகவே 'புதிய குடிவரவாளர்கள் சாம்பியன் விருதை' ஒன்ராறியோ அரசாங்கம் முதன்முறையாக ஆரம்பித்து அதைத் திருவுக்கு அளித்து கௌரவித்துள்ளது. இது தமிழ் மக்களுக்குக் கிடைத்த விருதாக எதிரொலிக்கின்றது.

காலம் தவறாமை திருவின் ஒரு சிறப்பியல்பாகும். 'தமிழர் தகவல்' எனக்குக் கிடைக்கப் பிந்தினாலும், அது மாத மாதம் வெளிவரும் திகதி தவறாது என்பதை நான் நன்கு அறிவேன். பதினேழு ஆண்டுகளாக - 200 மாதங்களுக்கு மேலாக ஒருமுறை கூட காலம் தவறாது வெளிவந்து கொண்டிருப்பது மட்டுமே அவரின் செயல்திறனைக் காட்டுகின்றது.

"செயல்திட்டமென்பது ஒருவன் மனத்திட்டம்
மற்றைய எல்லாம் பிற" என்கிறது குறள்.

இச்சிறப்பியல்பின் பின்னணியில் இருப்பவர் எவருமல்ல, அவரின் பாரியார் என்பதையும் நான் நன்கு அறிவேன்.

'தமிழர் தகவலில்' தொடர்ந்து எழுதுவோரின் கட்டுரைகளின் தரம் படிப்படியாக உயர்ந்து வருவது ஒரு முக்கிய அம்சமாகும். இளம் சமுதாயத்தினர் பலர் இணைந்து கொண்டு, முக்கியமாக ஆண்டு மலர்களில் எழுதிவரும் கட்டுரைகளுக்குப் பாராட்டுக் கிடைப்பதால் அவற்றின் தரமும் படிப்படியாக உயர்ந்து வருவதை அவதானிக்க முடியும். பலரின் பெறுபேறுகளை இனம் கண்டு அவர்களைப் பாராட்டி நன்மதிப்பை அளித்து வரும் 'தமிழர் தகவலின்' இயல்பு இதற்கு முக்கிய காரணமாகலாம்.

கலாநிதி கவிஞர் கந்தவனம் போன்றவர்கள் தமிழர் தகவலுக்கு அணிகலம் போலமைய, எங்கள் கலாசாரத்தை ஒருவகையில் பிரதிபலிக்கும் வகையில் நாளாந்த வாழ்க்கையில் ஏற்படும் விகடப் பேச்சுக்களை நூல் வடிவில் வெளியாக்கிய எனது நண்பன் கதிர் துரைசிங்கம் தமிழர் தகவலில் கட்டுரைகள் எழுதுவது மட்டுமல்லாமல், அதைக் காலம் தவறாது வியாபித்தலில் பெரும் கரிசனையுடன் உள்ளார்.

கனடாவாழ் தமிழ் மக்கள் கனடிய சமுதாயத்துடன் நெருங்கியதொன்றாக வாழ்வதுமல்லாமல் தமது அடிப்படை உரிமைகளோடு தமது தனித்துவத்தையும் பேணி வாழ்வதற்குதவும் பெருமகனாகத் திரு. திருச்செல்வம் சரித்திரத்தில் இடம்பெறுவார் என்பது எனது கருத்து.

'தமிழர் தகவல்' எங்கள் மத்தியில் எமது பல தேவைகளையும் பூர்த்தி செய்யும் ஒரு உன்னதமான சர்வதேச சஞ்சிகையாக நிலைபெறும் என்பது எனது நம்பிக்கை.

***குறிப்பு:***

*திரு. தனா புத்திரசிங்கம் அவர்கள் இலங்கையின் மூத்த விஞ்ஞான ஆசிரியர்களில் ஒருவர். யாழ் வைத்தீஸ்வரா, யாழ் மத்திய கல்லூரி ஆகியவற்றில் கடமையாற்றிய பின்னர், நைஜீரியா சென்று சில வருடங்கள் அங்கும் கல்விப்பணி புரிந்தவர். இலங்கையில் கல்விப் போதனாமொழி ஆங்கிலத்திலிருந்து சுயமொழிகளுக்கு மாற்றப்பட்ட வேளையில் பல விஞ்ஞான பாடநூல்களை முதன்முதலாகத் தமிழில் மொழியாக்கம் செய்து புகழீட்டியவர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மணி வேலுப்பிள்ளை
எழுதும் புதிய தொடர் -03

# ஒரு சொல் பல பொருள் கோவை

**ENGLISH - தமிழ்**

12. a fight **against** aggression = வலிந்த தாக்குதலுக்கு எதிரான ஒரு போராட்டம்
Put the fan **against** the wall = மின்விசிறியைச் சுவரை அண்டி வை
an injection **against** rabies = வெறிநாய்க்கடிநோய் தடுப்பூசி
insurance **against** theft = திருட்டினை ஈடுசெய்வதற்கான காப்புறுதி
romance **against** the background of war = போர்ச் சூழலில் ஒரு காதலூடாட்டம்
weigh the benefits **against** the cost = செலவுடன் நன்மைகளை ஒப்புநோக்கு

13. Dad feels his **age** = அப்பா தனக்கு வயது போவதை உணர்கிறார்
The dictator died of old **age** = அச்சர்வாதிகாரி வயது முற்றி மாண்டார்
act your **age** = உன் வயதுக்கு ஏற்றபடி நட
come of **age** = பருவமடை = உரிய வயதை அடை
**age** of consent = உடலுறவுக்கு உடன்படக்கூடிய வயது

14. foreign **aid** = வெளிநாட்டு உதவி
teacing **aids** = கற்பிக்க உதவும் சாதனங்கள்
in **aid** of the proposed library = உத்தேச நூலகத்துக்குப் பொருளுதவி நாடி

15. with the **aim** of doing a research = ஓர் ஆராய்ச்சி செய்யும் நோக்குடன்
take **aim** and fire = இலக்கு வைத்துச் சுடு = குறி பார்த்துச் சுடு
**aims** and objectives = இலக்குகளும் நோக்குகளும்
**aim** high = அதிகம் சாதிக்க முயலு
**aim** at that bird = அந்தப் பறவைக்கு இலக்கு வை
I did not **aim** my criticism at you = நான் உன்னைக் குறித்துக் கண்டனம் தெரிவிக்கவில்லை

16. **air** fare = வானூர்திக் கட்டணம் = விமானக் கட்டணம்
**air** your grievances = உன் உள்ளக்குறைகளை எடுத்துரை
**airs** and graces = எடுப்புச் சாய்ப்புகள்
country with an **air** of tolerance = சகிப்புணர்வு நிலவும் நாடு
float/walk on **air** = மகிழ்ச்சியில் மித (திளை)
fresh **air** = தூய காற்று
off (the) **air** = ஒலிபரப்பிலிருந்து விடுபட்டிரு
on (the) **air** = ஒலிபரப்பில் ஈடுபட்டிரு
put on **airs** = எடுப்புச் சாய்ப்புக் காட்டு
up in the **air** = இன்னும் முடிவெடுக்கப்படாத நிலையில்

17. **alien** beings = வேற்றுலகப் பிறவிகள்
**alien** culture = வேற்றினப் பண்பாடு
illegal **alien** = சட்டவிரோதமாகக் குடிபுகுந்த வேற்றுநாட்டவர்
Your idea is **alien** to our culure = உனது எண்ணம் எங்கள் பண்பாட்டுக்கு ஒவ்வாது

18. set the weeds **alight** = களையைக் கொளுத்து
The pigeon may **alight** on your head = புறா உன் தலையில் அமரக்கூடும்
**alight** from the car = காரிலிருந்து இறங்கு
My eyes **alighted** on the vermilion = எனது பார்வை குங்குமத்தில் பதிந்தது

19. stay **alive** = உயிர்தப்பி வாழ்
My grandfather is **alive** and kicking = என் பாட்டனார் சுறுசுறுப்பாக நடமாடித் திரிகிறார்
The city starts to come **alive** after dark = இருட்டிய பின்னர் மாநகரம் களை கட்டத் தொடங்கும்

20. **allied** forces = நேச நாடுகளின் படைகள்
skills **allied** with technical knowledge = தொழினுட்ப அறிவுடன் கூடிய திறன்கள்
medical and **allied** professions = மருத்துவத் துறையும் அதனுடன் இணைந்த துறைகளும்

21. **allow** the child to play = பிள்ளையை விளையாட விடு
Don't **allow** smoking inside = உள்ளே புகைக்க அனுமதிக்காதே
an hour, **allowing** for traffic delays = பயண தாமதம் உட்பட, ஒரு மணித்தியாலம்
The facts allow of only one explanation = நிகழ்வரங்களின்படி ஒரே ஒரு விளக்கமே கைகூடும்

22. living **allowance** = வாழ்க்கைப் படி
make **allowance(s)** for inflation = விலையேற்றத்தையும் கருத்தில் கொள்ளு
make **allownace(s)** for seniors = முதியோருக்கு விட்டுக்கொடு

23. Don't eat **alone** = தனியே உண்ண வேண்டாம்
Leave me **alone** = என்னைத் தொந்தரவு செய்ய வேண்டாம்
Leave the table **alone** = மேசையில் கைவைக்க வேண்டாம் (தொட வேண்டாம்/முட்ட வேண்டாம்)
Our people can stand **alone** = எமது மக்களால் தமது கால்களில் நிற்க முடியும்
There isn't enough room for us, let **alone** any guests! = எங்களுக்கே இடம் பற்றாது, விருந்தினர் எவர்க்காவது இடம் கிடைப்பதாவது!

24. **along** the street = தெரு வழியே
I'll be **along** in a few minutes = நான் ஒருசில நிமிடங்களுள் உங்களுடன் சேர்ந்து கொள்வேன்
This plant is coming **along** nicely = இச்செடி செவ்வனே வளர்கிறது

25. the **animal** kingdom = விலங்கினம்
**animal** magnetism = கவர்ச்சி
dumb **animal** = வாயில்லாப் பிராணி = வாய்பேசாப் பிராணி
higher **animals** = விருத்தியுற்ற விலங்குகள்

தொடர்ந்து வரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# EQAO - மதிப்பீட்டுப் பரீட்சைகள்
# EQAO - Assessment Tests

3ம், 6ம் வகுப்புகளுக்கான EQAO பரீட்சைகள் May 26 - June 6 வரையில் நடைபெறவுள்ளன. இந்த EQAO என்றால் என்ன. Education Quality and Accountability Office - அதாவது கல்வியின் தரத்திற்கும், பொறுப்புக்குமான கந்தோர் ஆகும். இந்தப் பரீட்சைகளை இக் கந்தோரே நடத்துவதால் இப் பரீட்சைகளை EQAO பரீட்சைகள் என அழைக்கிறார்கள். இது ஒரு மாகாண ரீதியான அமைப்பு. இதில் ஒன்ராறியோ கபினெற் (Cabinet) ஆல் தெரிவு செய்யப்பட்ட ஒன்பது நிர்வாக உத்தியோகத்தவர்கள் அங்கம் வகிக்கிறார்கள். 1996ல் Royal Commission on Learning மாணவர்களின் எழுத்தாற்றல், எண்ணாற்றல் முதலியன வீழ்ச்சியடைந்து கொண்டு வருவதாகவும் அதனை நிவர்த்தி செய்யாவிட்டால் ஒன்ராறியோ பாடசாலை மாணவர்களால் உலகளாவிய ரீதியில் பிறநாட்டு பாடசாலை மாணவர்களோடு போட்டியிட முடியாமல் போகலாம் என்று அபிப்பிராயப்பட்டனர். இதன் காரணமாக 1996ல் இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு 1997ல் முதன் முறையாக மாகாண ரீதியாக பொதுப் பரீட்சைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆரம்ப காலத்தில் இவ்வாறு பொதுப் பரீட்சைகள் வைப்பதால் மாணவர்களுக்கு அதிக அளவில் மன அழுத்தம் ஏற்படும் என்று பல கல்விமான்களும், பெற்றோர்களும் எதிர்ப்புத் தெரிவித்தனர். காலப் போக்கில் இது வீண் கிலேசம் என்பது புலனாயிற்று. இதற்கு மாறாக மாணவர்களின் தரத்தில் சிறு வகுப்புகளிலேயே குறிப்பிட்ட முன்னேற்றம் காணப்பட்டது. இதனால் உயர் வகுப்புகளில் அடையாளம் காணப்பட்டு பின்பு திருத்தப்பட வேண்டிய பின் தங்கிய அடைவுகள் நேரத்தோடு திருத்தப்பட்டன.

EQAO பரீட்சைகள் ஆரம்பிக்கப்பட்டு பத்து வருடங்கள் முடிவடைந்த நிலையிலும் அவை பற்றிய சந்தேகங்களும், நல் அபிப்பிராயங்களும், தப்பபிப்பிராயங்களும் பெற்றோர் மத்தியில் நிலவத்தான் செய்கின்றன. இதற்கான பரீட்சை ஆயத்தங்களைச் செய்யும் பெற்றோர் இன்றும் பதட்ட நிலையிலேயே காணப்படுகிறார்கள். இப் பரீட்சைகள் யாவும் ஒன்ராறியோ கலைத்திட்டத்தின் எதிர்பார்ப்புகளுக்குள் அடங்கியவையாகவே உள்ளன. ஆகவே இவற்றிற்காகப் பாடசாலைகளில் பிரத்தியேக வகுப்புகள் நடைபெறாவிட்டாலும் அவை ஏனைய பாடங்களின் கலைத்திட்டத்தில் அடங்கியுள்ளன (Knowledge and skills based on the expectations for students in the Ontario curriculum).

இப் பரீட்சைகளின் பெறுபேறுகள் மாணவர்களின் திறனை விருத்தி செய்கிறது என்ற நிலை தற்பொழுது மாறி பாடசாலைகளின் தரத்தை அளவிடும் ஒரு அளவுகோலாக மாறி விடுகிறது. அது மாத்திரமன்றி சில வதிவிடங்களின் (Neighbourhoods) பெறுமானம் இதனால் அதிகரித்தும் உள்ளது. இப் பரீட்சைகளின் பெறுபேறுகளைக் கொண்டு மாணவர்களையும், பாடசாலைகளையும், ஏன் ஆசிரியர்களையும் கூட முன்னேற்றம் அடையச் செய்யும் நிலைக்கு இன்று வந்துள்ளோம். பல கல்விச் சபைகள் தனிப்பட்ட போதனை தேவைப்படும் மாணவர்களுக்கு மேலதிக உதவிகளை வழங்க ஆரம்பித்துள்ளன. சில பாடசாலைகளில் பாடசாலையின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட (beyond their control) சில பிரச்சனைகள் காணப்படத்தான் செய்கின்றன. உதாரணமாக வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் பெற்றோரின் குழந்தைகள், புதிதாக நாட்டிற்கு வருகை தந்ததால் மொழிப் பிரச்சனைகளை எதிர்நோக்கும் குழந்தைகள், உடல், உள பிரச்சனைகள் உள்ள குழந்தைகள்



**கனகேஸ்வரி நடராஜா**
ஆசிரியர், இலங்கை-கனடா

(Physically & mentally challenged) முதலியோருக்கு மேலதிக உதவிகள் தேவைப்படுகின்றன. இவையெல்லாம் இப்பொழுது பாரிய அளவில் விருத்தி செய்யப்பட்டுள்ளன. Education professor Michael Fullan யோர்க் பிரதேசம், ஸ்காபரோ பிரதேசம் முதலியவற்றில் ஆசிரியர்களுக்கு விசேட பயிற்சி அளித்ததன் மூலம் ஒரு வருடத்தில் எழுத்து, வாசிப்பில் 5% முன்னேற்றத்தை அடைய முடிந்ததாகக் கூறுகிறார். முன்பு எல்லாம் இப் பரீட்சைகளின் பெறுபேறுகள் வெளியாகும் திகதியை பீதியுடன் எதிர்நோக்கிய ஆசிரியர்கள் இன்று எப்பொழுது வரும் என ஆவலுடன் எதிர்பார்க்கத் தொடங்கியுள்ளனர். ஏனெனில் பாடசாலைகள் மாணவர்களை முன்னேற்றுவதற்காகப் பல உத்திகளைக் கையாண்டு வருகிறார்கள். அவை எவ்வளவு தூரம் வெற்றியளித்துள்ளன என்பதனை அறிவதிலும், அவை வெற்றியளிக்காத இடத்து அவற்றை எவ்வாறு மாற்றியமைக்கலாம் என்பதிலும் பாட-சாலைகள் இன்று கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளன. இத்தகைய ஒரு பரீட்சை இருந்திருக்காவிட்டால் மாணவர்கள் இவ்வளவு தூரம் முன்னேறி இருக்க முடியாது என கல்விச் சபைகள் அபிப்பிராயப்படுகின்றன.

பெற்றோர்கள் மனதில் தோன்றும் சில வினாக்களுக்கு விடைகள்:

1. EQAO என்றால் என்ன - இந்தப் பொதுப் பரீட்சைகளை நடத்தும் கந்தோரின் பெயரே இதுவாகும். (Education Quality, Accountability Office).

எந்த வகுப்புகளில் இப் பரீட்சைகள் நடைபெறுகின்றன?
3 வகுப்பில் - Reading, writing, and Mathematics.
6 வகுப்பில் - Reading, writing, and Mathematics.
9 வகுப்பில் - Mathematics.
10 வகுப்பில் - Reading and writing.

3. OSSLT என்றால் என்ன?
Ontario Secondary School Literacy Test - இது 10 வகுப்பில் எழுதப்படும் எழுத்தறிவுப் பரீட்சையாகும்.

4. OSSLC என்றால் என்ன?
Ontario Secondary School Literacy Course. ஒரு முறை OSSLT யில் சித்தியடையாத மாணவர்கள் இப் பாடநெறியை பின்பற்ற அதிபர் முடிவு செய்யலாம். பின்பு இவர்கள் இரண்டாம் முறை OSSLT பரீட்சைக்குத் தோன்றுவார்கள்.

5. இப் பரீட்சை பெறுபேறுகளை எங்கு பிரசுரிப்பார்கள்.
EQAO இன் இணையத் தளமான www.eqao.com இல் பார்க்கலாம்.

6. பிள்ளைகளுக்கு இதற்கான தனிப்பட்ட தேர்ச்சி அறிக்கை வழங்கப்படுமா?
ஆம். EQAO ஒவ்வொரு மாணவனுக்கும் தனிப்பட்ட அறிக்கையை அனுப்பும்.

7. பிள்ளையின் தேர்ச்சி அறிக்கையில் இப் பெறுபேறுகள் பதியப்படுமா?
இல்லை. ஆனால் இப்பத்திரம் மாணவனின் பதிவேட்டில் வைக்கப்படும்.

8. மாணவர் தேர்ச்சி அறிக்கையில் இது கணக்கில் எடுக்கப்படாவிட்டால், இது பற்றி ஏன் அக்கறைப்பட வேண்டும்?
இப் பெறுபேறுகள் உங்கள் பிள்ளை கல்விச் சபையின் எதிர்பார்ப்புக்குரிய அறிவை எந்த அளவில் பெற்றுள்ளார் என்பதனை எடுத்துக் காட்டுகின்றன.

9. இப் பெறுபேறுகளை வைத்து என்ன செய்ய வேண்டும்?
பாட ஆசிரியரோடு இது பற்றி கலந்தாலோசித்து மேலதிக விளக்கங்களைப் பெற வேண்டும். குறைவாகச் செயல்பட்டிருந்தால் வீட்டில் என்ன வகையில் உதவலாம் என கேட்டு அறிதல் வேண்டும்.

10. எனது பிள்ளையின் பாடசாலை எவ்வாறு செயல்பட்டுள்ளது என்பதனை எப்படி

→



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கவிநாயகர் கந்தவனம் தரும்

## கனடியக் காட்சிகள்

# தலையாய அறிவித்தல்

**1. என்ன?**
தமிழ் மொழிக் கிழமை.

**2. எப்பொழுது?**
இந்த வைகாசித் திங்கள் 25 முதல் 31 வரை(25.05.2008 - 31.05.2008). தமிழ் மொழிக் கிழமை கொண்டாடப்படவுள்ளது.

**3. யார் கொண்டாடுகிறார்கள்?**
கனடியத் தமிழ் மக்கள். அவர்கள் சார்பில் தமிழ்க் கலை-தொழில்நுட்பக் கல்லூரி இதனை ஏற்பாடு செய்கின்றது.

**4. ஏன் கொண்டாடுகிறார்கள்?**
தமிழ் மொழியைக் கனடாவில் வளர்க்கும் நோக்குடன் கொண்டாடுகிறார்கள்.

**5. எப்படிக் கொண்டாடுகிறார்கள்?**
தமிழ் மொழி பற்றியும் தமிழர் பற்றியும் செயற்றிட்டங்கள், ஆய்வரங்குகள், கண்காட்சிகள், போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் அகியவற்றை நடத்திக் கொண்டாடுகிறார்கள்.

**6. போட்டிகளை யாருக்கு நடத்துகிறார்கள்?**
மாணவர்களுக்கு நடத்துகிறார்கள்.

**7. எத்துறையில் நடத்துகிறார்கள்?**
அறிவுத்துறை. மாணவரது தமிழ் அறிவை வளர்க்கும் நோக்குடன் தமிழ்-தமிழர் அறிவுப் போட்டியை நடத்துகிறார்கள்.

**8. எப்படி நடத்துகிறார்கள்?**
அகவை அடிப்படையில் நடத்துகிறார்கள். அகவைப் பிரிவுகள் பின்வருமாறு:

| | |
|---|---|
| தொடக்கப் பிரிவு: | 1998ஆம் ஆண்டும் அதன்பின் பிறந்தோரும் |
| கீழ்ப் பிரிவு: | 1996 - 1997 ஆண்டுகளிற் பிறந்தோர் |
| நடுப் பிரிவு: | 1994 - 1995 ஆண்டுகளிற் பிறந்தோர் |
| மேற் பிரிவு: | 1992 - 1993 ஆண்டுகளிற் பிறந்தோர் |
| உயர் பிரிவு: | 1990 - 1991 ஆண்டுகளிற் பிறந்தோர் |
| அதியுயர் பிரிவு: | 1989ஆம் ஆண்டும் அதன்முன் பிறந்தோரும் |

(ஆ) இப்போட்டிக்கான வினாக்கள் போட்டிக் குழுவினால் தயாரிக்கப்பட்ட வினா-விடைத் தொகுப்பிலிருந்து தெரிவுசெய்யப்படும். போட்டிக்கு விண்ணப்பிக்கும் பொழுது வினா-விடைத் தொகுப்பு வழங்கப்படும்.

(இ) போட்டியில் முதலிடம் பெறுவோருக்குத் தங்கப் பதக்கங்கள் பரிசாக வழங்கப்படும்.

(ஈ) போட்டிக்கான நுழைவுக் கட்டணம் $5.00 ஆகும்.

(உ) தமிழ் மொழிக் கிழமைபற்றியும் போட்டிகள் பற்றியும் மேலதிக விளக்கங்களுக்கு உங்கள் பகுதித் தமிழ்க்கலை-தொழில்நுட்பக் கல்லூரி வளாகங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.
அல்லது 416 757-1870, 416 300-7252 ஆகிய எண்களை அழையுங்கள்.

அறியலாம்? இதற்குரிய இணையத் தளத்தில் மிகவும் விரிவாக சகல விபரங்களும் கொடுக்கப்பட்டிருக்கும்.
11. ஒரு மாதிரிப் பரீட்சைத் தாளை எங்கு பெறலாம்?
இணையத் தளத்தில் மாதிரி வினாத்தாளையும், அதனை எவ்வாறு அளவீடு செய்கிறார்கள் என்பதனையும் பார்க்கலாம்.
12. பாடசாலைகள் இப் பரீட்சைகளுக்காக பிரத்தியேக வகுப்புகளை நடத்துகின்றனவா?
இல்லை. ஏனெனில் வழமையான கலைத்திட்டத்தில் இவை அடங்கியுள்ளன. ஆகவே எல்லாப் பாடங்களையும் முறையாகக் கற்றால் அந்த அறிவே இப் பரீட்சைகளைக் கையாளப் போதுமானதாக உள்ளது.

உலகளாவிய ரீதியில் எம் மாணவர்கள் திறம்பட செயலாற்ற வேண்டும் என்ற நோக்கம் ஈடேறி வருவதைக் காணக் கூடியதாக உள்ளது. Programme for International Student Assessment (PISA) 5 வருடங்களுக்கு ஒரு முறை நான்காம் வகுப்பு மாணவர்களின் Reading skills ஐ மதிப்பீடு செய்கிறது. இதனை International Association for the Evaluation of Educatinal Acheivement நிறுவனம் நடத்துகிறது. 2006 ஆண்டு 45 நாடுகள் இதில் பங்கேற்றன. ஒன்ராறியோவிலிருந்து 3988 நான்காம் வகுப்பு மாணவர்களின் Reading skills மதிப்பீடு செய்யப்பட்டது. November 28, 2007ல் வெளியிட்ட தரவுகளின்படி உலகின் அதி சிறந்த வாசிப்புத் திறன் உள்ள மாணவர்களாகக் கனடா பிள்ளைகள் கணிக்கப்பட்டுள்ளனர். ரஷ்யா, ஹொங்கொங் நாடுகளே ஒன்ராறியோவிலும் பார்க்க மேலதிகமாகச் செயல்பட்டுள்ளன. 16% ஒன்ராறியோ மாணவர்கள் அதி உயர்ந்த புள்ளிகளையும் பெற்றனர். 91% 10 வகுப்பு மாணவர்கள் உலகளாவிய ரீதியில் நடத்தப்பட்ட விஞ்ஞான பாட (Critical science) அளவீட்டில் மேலதிகப் புள்ளிகளைப் பெற்றுள்ளனர். அத்துடன் இங்குதான் உலகிலேயே பொருளாதார நிலையில் உயர்ந்தவர்களுக்கும், தாழ்ந்தவர்களுக்கும் இடையே அடைவுகளில் மிகவும் குறைவான இடைவெளி காணப்படுவதாக 2004, 2007 இல் PISA வெளியிட்ட அறிக்கை கூறுகிறது.

EQAO இன் பிரதம நிர்வாக உத்தியோகத்தரான Marguerite Jackson இந்த முடிவுகள் வருடா வருடம் நடைபெறும் EQAO பரீட்சைகளின் பெறுபேறுகளோடு ஒத்துப் போவதாகவும், இவ்வளவு சிறப்பாக உலக அரங்கில் (World stage) ஒன்ராறியோ மாகாணப் பிள்ளைகள் செயல்படுவதற்கு EQAO பரீட்சைகளே உதவியுள்ளதாகக் கூறுகிறார். மாணவர்கள் மத்தியில் எழுத்தறிவுக்கு வீட்டில் என்ன உதவிகள் வழங்கப்படுகின்றன என்று PIRLS நடத்திய ஆய்விலும் (Early Home Literacy Activities) (EHLA) 71% ஒன்ராறியோ மாணவர்கள் உயர்ந்த ஒரு தளத்தில் காணப்படுகிறார்கள் (High EHLA category). இன்று பாடசாலைகளிலும், வீடுகளிலும் மாகாண ரீதியான பரீட்சைக்கு மாணவர்களை ஆயத்தப்படுத்துவதற்கான பல வழிமுறைகளைக் கையாளுகிறார்கள். இவ்வாறு செய்வதால் சிறுவயதிலேயே மாணவர்கள் வாசிப்பு, எழுத்து, எண் ஆகியவற்றில் நன்றாகச் செயற்பட ஆரம்பிக்கிறார்கள். இத்தகைய ஒரு ஸ்திரமான அத்திவாரம் இடப்படுவதால் பாடசாலைக் கல்வி அடைவுகள் நன்றாக அமைய இப் பரீட்சைகள் வழிவகுக்கின்றன.

பெற்றோர்கள் வாசிப்புப் பழக்கத்தை பாடசாலைக்கு அனுமதிக்கு முன்பே ஆரம்பித்தல் (Pre School) பிள்ளைகள் நன்றாகச் செயல்பட உதவியாக இருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணையத்தில் குழுக் கல்வி முறை!

இளையோரிடையே மிகப் பிரபலமாகக் காணப்படும் Facebook எனப்படும் தகவற் பரிமாற்ற தளத்தை கல்விச் செயற்பாடுகளுக்கு பயன்படுத்த கல்வி நிறுவனங்கள் ஆரம்பித்துள்ளன. வெஸ்டன் ஒன்ராறியோ பல்கலைக்கழகம் இவ்வருடம் 25 Facebook கல்விக் குழுக்களை முதலாம் வருடப் பாடங்களுக்கு ஆரம்பித்துள்ளது. உயிரியல், ஆங்கிலம், இரசாயனவியல், மனோதத்துவம் போன்ற பாடங்களுக்கு இவை பயன்படுத்தப்படுகின்றன.

## நம்பிக்கை தரும் மருந்திணைப்பு

இரண்டு மருந்துகளின் கூட்டுச் சேர்க்கையின் விளைவுகள் நம்பிக்கை தருவதாக இருப்பதாக கூறப்படுகிறது. American College of Cardiology in Chicago இல் உலகளாவிய ரீதியில் நடைபெற்ற மருந்துகளின் சோதனையின் போது உயர் இரத்த அழுத்தத்தை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கு இரண்டு பொதுவான hypertenson மருந்துகளை சேர்த்து பாவிக்கும் போது, மிகவும் ஆபத்தான நிலையிலுள்ள இரத்த அழுத்தத்தையும் கூட கட்டுக்குள் கொண்டு வரலாம் என காட்டப்பட்டுள்ளது.

சோதனை முயற்சியின் போது, ACE இன்கிபிற்றருடன், CCB குளிசை மருந்தினையும் சேர்த்தெடுக்கும் போது நோயாளர்கள் 20% குறைந்த, மிகவும் ஆபத்தான இருதய நோய் நிலைகளைக் கொண்டிருந்தனர். இவற்றுள் மாரப்படைப்பு, பக்கவாதம் என்பனவற்றிலிருந்து இறப்பு வரை அடங்கும்.

இந்த இடைப் பரிசோதனை முடிவுகள், தற்போது நடைமுறையிலிருக்கும் சிகிச்சை முறை அடிப்படையையே அசைக்கும் என மருத்துவர்கள் கூறுகின்றனர்.

## அதிகரிக்கும் வேலைவாய்ப்புகள்!

கடந்த மாசி மாதத்தில் புதிதாக 43,000 தொழில் வாய்ப்புகள் உருவாகியிருப்பது பொருளாதார வல்லுனர்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளது. கனடா தரவுகள் திணைக்களம், நாட்டின் வேலையற்றோர் வீதம் மாறாமல் உள்ளதென்றும், கடந்த 33 வருடத்தில் மிகக் குறைவானதான 5.8 வீதத்திலேயே இருப்பதாகவும் தெரிவித்துள்ளது. மாறாக, அமெரிக்கா இதே மாதத்தில் 63,000 தொழில்களை இல்லாமல் செய்துள்ளது.



பொன்னையா விவேகானந்தன்

## பொன்னின் பொழிகை

தொடர் 15

## வினா - ?

மனிதனது அனைத்துப் பரிமாணங்களுக்குமான ஒற்றை வாசல். வினாவை எழுப்பத் தெரிந்திராவிடில் மனிதர் கால்நடைப் பட்டியலுக்குள்ளேயே காணப்பட்டிருப்பர்.

வினா எனும் செயற்பாட்டினூடாகவே உண்மைப் பிரபஞ்சங்கள் உலகெங்கும் விரிந்திருக்கின்றன.

சிரிக்கத் தெரிந்திருப்பதைப் போல் வினா எழுப்பத் தெரிந்திருப்பதுவும் மனிதனுக்கு மட்டுமே உரிய சிறப்பியல்பு. வினாவை மொழியால் மட்டுமல்ல, பாவத்தாலும் (உணர்வு) வினாவ மனிதனால் முடிகிறது.

வளரும் பிள்ளைகள் விரும்பியதைக் கேட்பதைவிட வினாவையே அதிகமாகக் கேட்கின்றார்கள். அதனாற்தான் வளர்கின்றார்கள்.

வினாக்களில்தான் எத்தனை வகைகள்.

அறிந்துகொள்ளும் ஆர்வத்தில் எழும் வினா
அடுத்தவன் இரகசியத்தை அறியக் குடையும் வினா
முட்டாள்கள் எழுப்பும் வினா
புத்திசாலிகள் மூலம் தேடித் தொடுக்கும் வினா
ஆச்சரிய வினா
அவல வினா

வரிசையிட்டால் சரஞ்சரமாய்த் தோன்றும் வினாவகைகள்.

வினாக்கள் விடையை மட்டும் தேடுவதல்ல, வேறு பல வினாக்களையும் உருவாக்கிவிடுகின்றன. வேறு சில வினாக்கள் தேடிய விடைகளையே தொலைத்து விடுகின்றன.

அப்பாவித்தனமான பல வினாக்களுக்கு அதிகாரத் தோரணையான விடைகள் கிடைத்து விடுகின்றன. அதட்டலான சில வினாக்களுக்கு பரிதாபத்திற்குரிய விடைகள் கிடைத்து விடுகின்றன.

எல்லா இடங்களிலும் விடைகளும் இருக்கின்றன வினாக்களும் இருக்கின்றன. ஆனால் சரியான வினாக்களும் சரியான விடைகளும் சந்தித்துக் கொள்வதில்லை. உலக முரண்கள் தோற்றம் பெறும் முதற் களம் இதுதான்.

உணர்வுகளைக் கிளர்வதில் வினாக்களுக்கு இருக்கும் ஆற்றல் தனித்துவமானது.
வினாக்களால் சீண்டப்பட்ட உணர்வுகள்,
சிதைக்கப்பட்ட உணர்வுகள், சீராக்கப்பட்ட உணர்வுகள்,
தாலாட்டப்பட்ட உணர்வுகள், தடவிக் கொடுக்கப்பட்ட உணர்வுகள்,

ஒருவகையில் உணர்வுகளின் அளவுகோலாக வினாக்கள்தான் இருக்கின்றதோ?

விடையைத் தொலைத்தவர்கள் ஒருபுறம் இருக்க, வினாவைத் தொலைத்தவர்களும் அதிகமாய் இருக்கின்றார்கள். வினாவைச் சுமந்து கொண்டு விடை தேடிப் போகையில் பாதை தொலைத்தவரும் பலர் இருக்கின்றார்கள்.

என்னிடம் எந்த வினாவும் இல்லை என எவராலும் சொல்ல முடிவதில்லை, அது போன்று என்னிடம் எல்லா விடைகளும் இருக்கின்றன எனக் கூறிவிட எல்லோராலும் முடிவதில்லை.

வினாக்களையும் விடைகளையும் கொண்டு திரிவோரைவிட, தேடுவாரின்றிக் கிடக்கும் வினாக்கள் விடைகளின் தொகை அதிகம்.

வினாவை எழுப்புங்கள் என இளைஞர்களுக்குக் கற்றுக் கொடுத்த ஒரு விடை நஞ்சூட்டிக் கொல்லப்பட்ட துயர வரலாறு இந்தப் பூமிக்கு உண்டு. வினாக்கள் பெருப்பாலும் பாதுகாப்பான இடத்தில் இருந்தே புறப்படுகின்றன. எப்போதும் எச்சரிக்கையாக இருக்க வேண்டியவை விடைகளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ஜெகதீசன் எழுதும்
பத்தாம் பக்கம்

# தனித் தன்மை தகடுகள்

கனடாவில் தமது வாகனங்களுக்கு சுய விருப்பம் போல் தகுந்த இலக்கத் தகடுகளை வைத்திருப்பதில் ஆர்வம் உள்ளவர்கள் அவற்றை தனி தன்மை தகடுகள் (Personalized Plates) என்ற பெயரில் விலைக்கு வாங்கி ஆயுள் பரியந்தம் தமது உடைமையாக்குகின்றனர்.

அலங்காரம் அடையாளம் அந்தஸ்து என பல காரணங்கள் அதற்கு இருக்கலாம். வசதிபோல் எண் சாஸ்திர முறைப்படியும் அமைக்கலாம்.

தெரிவு செய்யும் வாக்கியம் உலக மொழிகள் ஏதாவது ஒன்றில் இருப்பினும் பதிவுசெய்யும் எழுத்துகள் ஆங்கிலத்தில் பயணிக்க விழிக்கும் வீதிகளில் பல்லின மக்களும் தம் மொழியில் மௌனமாய் குசலம் விசாரிப்பர்.

தமிழரிடமும் இந்த மோகம் வேகமாக பரவ ஆங்கில எழுத்துகளில் தமிழ் வார்த்தைகள் வனப்புடன் வசீகரித்து சாலைகளில் விரைகின்றன. கண்ணிமைக்கும் நேரத்தில் எம் கண் இமைக்குள் ஓடுகின்றன.

தனியார் வாகனங்கள் பயணிகள் வாகனங்கள் வர்த்தக வாகனங்கள் நிறுவன ஊர்திகள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் என எவற்றிக்குமே சிறியவை பெரியவை என்ற பேதமின்றி இத்தகடுகளை பொருத்தலாம்.

பூரணமாக எழுத்துக்களாலோ அல்லது முழுக்கமுழுக்க எண்களாலோ அல்லது இரண்டும் கலந்து விருப்பப்படியோ இவற்றை அமைக்கலாம்.

இரு சக்கர வண்டிகளுக்கு இரண்டு முதல் ஐந்து உறுப்புகளையும் நான்கு சில்லு வாகனங்களுக்கு இரண்டு முதல் எட்டு உறுப்புகளையும் உள்ளடக்கியவையாக தகடுகளில் வாசகம் இருத்தல் வேண்டும்.

வரைவோவியமும் தகட்டில் இடம்பெறவேண்டுமெனின் எண்களோ எழுத்துக்களோ இரண்டு முதல் ஆறு ஸ்தானங்களிலமையும்.

உங்கள் விருப்பத்தெரிவு ஏற்கனவே பாவனையில் இருந்தாலும் வேறு எதாவது காரணங்களுக்காக நிராகரிக்கப்பட்டிருந்தாலும் ஏற்றுகொள்ள மறுக்கப்படும். அத்துடன் விரசம் சிந்தக் கூடாது துவேஷம் கக்கக் கூடாது. வெறுப்பை உமிழக் கூடாது. சமய வர்க்க வன்செயல்களையோ பாலுறவையோ துாண்டக்கூடாது. கேலி கிண்டல் நக்கல் நளினம் நையாண்டி எந்த வடிவிலும் தொனிக்கக்கூடாது என்பதும் கண்டிப்பான நிபந்தனைகளாகும்.

பரிசீலனை குழு விண்ணப்பங்களை அலசி ஆராய்து அங்கீகரிக்கும். பின்னர் புதிய தகடுகள் வார்க்கப்பட்டு அனுப்பப்படும். அதன் பின்னர் வழிமேல் விழி என்பது வழி மேல் மொழி என தெருவினில் திரியும்.

மாதிரி தகடுகளும் விற்பனைக்கு உண்டு. அவை பாவனைக்கல்ல.

வரைவோவியத்துடன் கூடிய இரண்டு முதல் ஆறு வரையான உறுப்புகள் உள்ள தனித்தன்மை தகட்டின் விலை $ 314.00. இரண்டு முதல் எட்டு வரை உறுப்புகள் உள்ள நாலு சில்லு வாகனங்களுக்கும் இரண்டு முதல் ஐந்து வரையான ஸ்தானங்களுடைய மோட்டார் சைக்கிள்களுக்கும் $ 235.25.

1 800 288 6758 என்ற தொலை பேசி இலக்கமோ அல்லது அண்மையில் உள்ள சாரதி அனுமதி பத்திரம் வழங்கும் நிலையமோ அல்லது போக்கு வரவு அமைச்சின் தானியங்கிக் கூண்டுகளோ உங்கள் விண்ணப்பங்களை ஏற்கும். மேலதிக விபரங்களுக்கும் வழி காட்டும்.

## வீதிக் கமராக்களினால் உயிராபத்துகள் குறைவு! ஆனால் விபத்துகள் அதிகம்!

வேகத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் சந்திகளில் அமைக்கப்பட்டுள்ள கமராக்களினால், உயிராபத்தை உண்டாக்கும் விபத்துகள் குறைந்துள்ளன. அதேநேரத்தில், வேகமாக வாகனமோட்டி வருபவர், கமராவில் அகப்படுவதைத் தவிர்ப்பதற்காக சடுதியாக வேகத்தடையினை (Brake) ஏற்படுத்தும் பொழுது, பின்னால் வரும் கார்கள் ஒன்றுடன் ஒன்று மோதுவதன் மூலம் ஏற்படும் விபத்துகள் அதிகரித்துள்ளன என்று அண்மைய அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது. அதாவது உயிராபத்தை ஏற்படுத்தும் விபத்துகளின் எண்ணிக்கை குறைந்தும், சொத்துகளிற்கு சேதமேற்படுத்தும் விபத்துகளின் எண்ணிக்கை கூடியும் காணப்படுகின்றது.

ரொறன்ரோவில் 38 சந்திகளில் பொருத்தப்பட்ட கமராக்களின் பயன்பாடு பற்றிய அறிக்கையின்படி, உயிரிழப்புகள் அல்லது காயங்கள் ஏற்படுவது 18.2 வீதத்தினால் குறைந்துள்ளது. சொத்துக்களுக்கு மாத்திரம் அழிவேற்படுத்தும் விபத்துகள் 4 வீதத்தினால் கூடியுள்ளது. ரொறன்ரோவைத் தவிர, ஹமில்ரன், ஒட்டாவா, மற்றும் ஹால்ரன், பீல், வோட்டர்லூ பிரதேசங்கள் கமராவைக் கொண்டுள்ளன.

ஒன்ராறியோ மாகாண ரீதியாகப் பார்க்கையில், கோண அல்லது 'T' விபத்துகள் 25.3 வீதம் குறைந்துள்ளது, பின்பக்கமாக மோதும் விபத்துகள் 49.9 வீதம் அதிகரித்துள்ளன. முன்னால் போய்க் கொண்டிருப்பவர், சிவப்பு விளக்கு வருவதற்கு முன் போய்விடுவார், நாமும் போய்விடலாம் என எண்ணி வேகமாக பின்னால் போகாமல் நிதானிக்கவும்.

## இப்படியும் பரிசோதனை

கைத்தொலைபேசி நிறுவனங்கள், காற்றின் மூலம் இயங்கும் விசைப்பொறி உருளைகளையும், சூரிய ஒளி மூலம் சக்தியை உருவாக்கும் பொறிமுறையையும் பயன்படுத்தி சக்தியை உருவாக்கி அதன்மூலம் தமது தொலைதொடர்புக் கோபுரங்களை இயக்க பரிசோதனை செய்து வருகின்றன. ஒரு வீட்டின் பாவனையைப் போன்று எட்டு மடங்கு சக்தி இக்கோபுர பாவனைக்குத் தேவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயன்படுத்தப்படாத சுனாமி நிதி!

ஆசியாவில் பல நாடுகளை சுனாமி தாக்கி மூன்று வருடத்திற்கு மேலாகியும், கனடியன் ரெட் குரொஸ் (Red Cross) ஸ்தாபனம், கனடியர்களினால் நன்கொடையாக அளிக்கப்பட்ட $360 மில்லியன் டாலர்களில் $200 டாலர்களினை இன்னும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உபயோகிக்காமல், இருப்பில் வைத்திருக்கின்றது.

மார்கழி 26, 2004 அன்று இந்தோனேஷியா, இலங்கை, இந்தியா, தாய்லாந்து உட்பட 11 நாடுகளை சுனாமி தாக்கியது. 225,000 இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர். இதனால் ஏற்பட்ட பாதிப்பிற்கு உதவுவதற்காக கனடியர்கள் தமது மனத்தையும், பணப் பையையும் தாராளமாக திறந்தனர்.

ரெட் குரொஸ் நிறுவனம், பணம் கேட்டு வேண்டுகோள் விடுத்தபோது, தனிப்பட்டவர்கள், நிறுவனங்கள், மத்திய அரசாங்கம் மிக விரைவில் காசோலைகளை அனுப்ப முடியவில்லை. பெருந்தொகையானவை அழிவு நடந்த ஒரு மாதத்திற்குள் வந்து சேர்ந்து விட்டது.

எல்லாவற்றையும் கணக்கிட்ட போது $360 மில்லியன் சேர்க்கப்பட்டிருந்தது. ரெட் குரொஸ் நிறுவனம் இந்த $200 மில்லியனும் 6,000 வீடுகள் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட பணம் என்கிறது. அத்துடன் மற்றைய தர்ம ஸ்தாபனம் பல காலங்களுக்கு முன்பே நன்கொடைகள் ஏற்பதை நிறுத்தி விட்ட போதிலும், கனடியன் ரெட் குரொஸ் தொடர்ந்து ஒரு வருடமாக நன்கொடைகள் சேர்த்துக் கொண்டிருந்தது.

## வாழ்வதற்கான முதல் நாடு

ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையின்படி ஐஸ்லான்ட் (Iceland) உலகிலேயே வாழ்வதற்கு விருப்பமான முதல் நாடாகத் தெரிவு செய்யப்பட்டி ருக்கிறது. நோர்வே இரண்டாவதாகவும், முறையே அவுஸ்திரேலியா, கனடா, அயர்லான்ட் ஆகியவை 3ம், 4ம், 5ம் இடங்களைப் பெற்றிருக்கின்றன. அமெரிக்கா கடந்த வருடத்தில் எட்டாம் இடத்திலிருந்து இவ்வருடம் பன்னிரண்டாவது இடத்திற்குத் தள்ளப்பட்டிருக்கிறது. நோர்வே ஆறு வருடங்களாக முதலாமிடத்திலிருந்தது. வாழ்க்கைக் காலம், தனிநபர் வருமானம் போன்றவற்றின் அடிப்படையில் ஐஸ்லான்ட் இவ்வருடம் முந்தி விட்டது. ஜப்பானியர்களே கூடிய வாழ்க்கைக் காலமாக 82.3 வருடங்களைக் கொண்டவர்களாகவுள்ளனர்.



குயின்ரஸ் துரைசிங்கம் 22

கணினிப் பக்கம்

## காக்க காக்க கணினி காக்க...

தமிழ் எழுத்துருக்களை தட்டச்சுக் கருவியில் இலகுவாக அடையாளம் காண்பதற்கு ஏதுவாக, ஆங்கில எழுத்துக்கு இணையான தமிழ் எழுத்தை, மிகச் சாதாரண பாவனையாளர்கள் கண்டறியும் வகையில் மேலும் ஒரு அட்டவணையும் உள்ளது. இந்த எழுத்துரு அட்டவணை, பாமினி அல்லது அதற்கு நிகரான எழுத்துருக் கோவைகளுக்கான அட்டவணை என்பதை பாவனையாளர்கள் நினைவிற் கொள்வது முக்கியமானது. வேறு வகை எழுத்துருக்களுக்கு இந்த அட்டவணை சிலவேளை பொருந்தாமல் போக வாய்ப்பிருக்கிறது.

மின்னஞ்சல் அனுப்புவதை புதிதாகப் பழகுகின்ற பாவனையாளர்கள், உங்களது மின்னஞ்சல் முகவரிக்கே பல்வேறு மின்னஞ்சல்களையும் அனுப்பி, பரீட்சித்துப் பார்க்கலாம். உதாரணமாக, ஜிமெயில் அல்லது வேறுவகை மின்னஞ்சல் சேவையில், மின்னஞ்சல் முகவரியைப் பதிவுசெய்து பெற்றுக்கொண்ட பின்னர், அந்த முகவரியிலிருந்து, உங்களது அதே முகவரிக்கே மின்னஞ்சல் அனுப்புங்கள். அனுப்பிய மின்னஞ்சல் கிடைத்ததும், அது சரியாக இருக்கிறதா, அதைப் பெறுபவர் திருப்தியடையும் வகையில் அந்த மின்னஞ்சலை நீங்கள் உருவாக்கியிருக்கிறீர்களா என்பதை பரிசோதித்துப் பாருங்கள். குறிப்பாக, தமிழில் மின்னஞ்சல் அனுப்புவதாக இருந்தால், ஒரு சில வரிகளை தமிழில் தட்டச்சு செய்து, அதை உங்களது முகவரிக்கே அனுப்பி, அது சரியாக வருகிறதா என்று பாருங்கள். வந்திருக்கும் மின்னஞ்சல் உங்களுக்கு திருப்தி தருவதாக இருந்தால், நீங்கள் வெற்றி பெற்று விட்டீர்கள் என்று அர்த்தம். இனி என்ன கவலை, அத்தனை நண்பர்களுக்கும் ஈமெயிலில் ஹாய் சொல்லி, புதிய இலத்திரனியல் உறவுக்குள் அனைவரையும் அழைத்து வாருங்கள். அல்பேட்டாவில் சென்று குடியேறிவிட்ட நண்பருக்கும், வார்ட்டர்லூ பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டிருக்கும் உங்கள் இளைய மகளுக்கும், திடீர் ஈமெயில் அனுப்பி அசத்துங்கள்.

**யுனிகோட் [Unicode] எழுத்துரு (ஒருதர அல்லது ஒருங்குறி எழுத்துரு)**

கணினி உலகின் பல்வேறு அம்சங்களையும் இதுவரை பார்த்தோம். குறிப்பாக ஈமெயில் அனுப்புவது மற்றும் தொடர்புகளைப் பேணுவது உட்பட, இணையத்தைப் பயன்படுத்தும் முறைகள் பற்றியும் பல தகவல்களைப் பரிமாறிக் கொண்டோம்.

இணையத்தில் தகவல்களைத் தேடும்போதும், மின்னஞ்சலில் தகவல்களை அனுப்பும் போதும், ஆரம்பகட்ட கணினிப் பாவனையாளர்களுக்கு உதவுகின்ற ஒரு பொது எழுத்துருவாக, பாமினி (bamini) செயற்படுகிறது என்றும் பார்த்தோம். இருப்பினும், இப்படி குறிப்பிட்ட தமிழ் எழுத்துரு (font) இல்லாமல், ஏனைய பல மொழிகளைப் போன்று, தமிழ் மொழியையும் வாசிப்பதற்கு, எழுதுவதற்கு, தகவல் பரிமாற்றத்தில் பயன்படுத்துவதற்கு வழி இல்லையா என்ற ஒரு கேள்வி, கணினிப் பாவனையாளர்களிடம் எப்போதும் எழுவது தவிர்க்க முடியாததாகி விடுகிறது.

இத்தகைய எழுத்துரு குழப்பங்களை நீக்குவதற்காக, பலரின் நீண்டகால உழைப்பில் பிறப்பெடுத்த புதிய குழந்தைதான் யுனிகோட் எழுத்துரு (Unicode Font).

கணினி உலகில் பயணிக்க ஆரம்பித்து, பல்வேறு ஆரம்பகட்டத் தகவல்கள் விடயங்களையும் பயின்றுகொண்டதும், அடுத்து நாம் கற்கவேண்டிய விடயம், இந்த பொது கணினி எழுத்தாக வலம்வரும் யுனிகோட் எழுத்துரு பற்றிய விடயங்கள் தான்.

யுனிகோட் (Unicode) என்பது எழுத்து வடிவிலான தகவலை எம்மொழியிலும் கணினிகளில் பயன்படுத்த உதவும் உலக அளவிலான ஒருங்குறி எழுத்துரு அல்லது குறிமுறை நியமமாகும்.

அடுத்த இதழில் தொடரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடிய தின வைபவத்தை முன்னிட்டு
# தமிழர் தகவல் பதினோராவது ஆண்டாக நடத்தும்
# பாடசாலை மாணவர் விவேகப் போட்டி

**முதலாம் பரிசு: தங்கப் பதக்கம்**

அனைத்துக்கும் சரியான விடையளிக்கும் அனைவருக்கும் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

**விடைகள் கிடைக்க வேண்டிய இறுதி நாள்:**
**2008 ஜூன் 20 வெள்ளிக்கிழமை**

ஜூலை மாதம் முதலாம் திகதி வரும் கனடா தினத்தை முன்னிட்டு 'தமிழர் தகவல்' வருடாந்தம் நடத்தும் மாணவர் விவேகப் போட்டியில் கனடாவின் எந்தப் பாகத்திலுமுள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களும் பங்கு பற்றலாம். விடைகள் மாணவரால் தமிழில் மட்டும் எழுதப்பட வேண்டும். விடையுடன் சேர்த்து மாணவரின் முழுப்பெயர், வயது, கல்வி கற்கும் பாடசாலையின் பெயர், வகுப்பு, வீட்டு முகவரி, வீட்டுத் தொலைபேசி இலக்கம் ஆகியவைகளையும் தவறாது எழுத வேண்டும். போட்டி தொடர்பான கடித/தொலைபேசித் தொடர்புகள் எதுவும் ஏற்கப்படாது.

விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி:

**Canada Day Quiz Contest - 2007**
**P.O.Box - 3, Station - F, Toronto, Ontario. M4Y 2L4.**

## போட்டிக்கான கேள்விகள்

1. ஒன்ராறியோ மாகாண அரசு இந்த ஆண்டிலிருந்து பிரகடனப்படுத்திய விடுமுறை நாளின் பெயர் என்ன? இது எந்த மாதத்தில் வரும்?
2. 2008 ஆண்டு தமிழர் தகவல் விருது பெற்றவர்கள் எத்தனை பேர்" அவர்கள் பெயர் என்ன?
3. கனடாவில் அதிக தொகையில் அச்சடிக்கப்பட்டு, அதிக தொகையில் மக்களால் பெறப்பட்டு, வாசகர் தொகையிலும் முன்னணியில் நிற்கும் வாராந்தத் தமிழ்ப் பத்திரிகை எது?
4. ரிவிஜ தொலைக்காட்சி/சி.எம்.ஆர் வானொலிச் சேவை நிறுவனங்களால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட வானொலிச் சேவையின் பெயர் என்ன? இது எந்த மாகாணத்தில் ஒலிபரப்பாகின்றது.
5. கனடிய நாடாளுமன்றத்தின் நான்கு தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் இந்த வருடத்தில் எப்போது நடைபெற்றது. இதில் எந்தெந்தக் கட்சிகள், எத்தனை ஆசனங்களை வென்றன.
6. தற்போது கனடியர்கள் ஜி. எஸ் ரி (GST) வரியாக ஒரு டாலருக்கு எவ்வளவு சதம் செலுத்துகின்றனர்.
7. தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்றுறைப் பொறுப்பாளரின் பெயர் என்ன?
8. ஈழத் தமிழரின் தாயக பூமியான வட-கிழக்கு மாகாணத்தில் எத்தனை நிர்வாக மாவட்டங்கள் உள்ளன? அவற்றின் பெயர் என்ன?
9. கனடியத் தமிழரின் மிகப்பெரிய நூலகத்தின் (தமிழ்) பெயர் என்ன? இது எங்கு அமைந்துள்ளது?
10. தமிழர் தகவலின் முதலாவது இதழ் எந்த வருடம், எந்த மாதம் வெளிவந்தது?
11. ஒன்ராறியோ மாகாண லெப்டினனட் கவர்னரின் பெயர் என்ன? இப்பதவியை ஏற்பதற்கு முன்னர் இவர் என்ன தொழில் புரிந்தார்?
12. கனடிய மத்திய அரசின் கீழ் மட்டும் வரும் முக்கிய இரண்டு அமைச்சுகளின் பெயர்களைக் குறிப்பிடுக?
13. கனடிய தின வைபவம் உத்தியோகபூர்வமாக எந்த மாதம் / எந்தத் திகதியிலிருந்து. எந்த மாதம் / எந்தத் திகதி வரை கொண்டாடப்படும்?
14. கனடாவின் மூன்று பிரதேசங்களின் (Territories) பெயர்களையும் குறிப்பிடுக?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனக் கணக்கு!

நான்கில் ஒருவர் மனக்கணக்குப் போடுவதில் கஷ்டப்படுகின்றனர் என பிரித்தானிய ஆய்வறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது. அதிலும் பெண்கள் ஆண்களை விட தன்னம்பிக்கை குறைந்தவர்களாகக் காணப்படுவதாக, BBC online தெரிவித்துள்ளது. ஆண்களும் பெண்களுமாக 2,000 பேரில் இந்த ஆராய்ச்சி செய்யப்பட்ட போது, மூன்றில் ஒரு பெண்கள் மனதால் கணக்குக் கூட்டிப் பார்ப்பதில் பிரச்சனைப்படும் போது (அதாவது ஏறத்தாழ 35%), ஆண்களில் 18 வீதமானோரே பிரச்சனைப்பட்டுள்ளனர். இவர்களுள் 47 வீதமானோர் தமது பள்ளிக் காலத்தில் கணிதத்தில் கொஞ்சம் கூடுதலாகக் கவனம் செலுத்தியிருக்கலாம் என அபிப்பிராயப்பட்டுள்ளனர். அரைவாசிக்கும் மேற்பட்ட பெண்கள், குழந்தைகளாலும் குடும்பத்தவராலும் தம்மிடம் கணக்கில் கேள்விகள் கேட்கப்படுவதாகவும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தாம் பதிலளிக்க கஷ்டப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

முன்பு வெளியிடப்பட்ட அறிக்கையொன்று, குறிப்பிடத்தக்களவு தொகையான வயது வந்தோர் கணிதத்தில் பிரச்சனைப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்திருந்தது.

25 இலிருந்து 34 வயதிற்குட்பட்டவர்களில் ஐந்தில் ஒருவர் கணிதத்தில் தமக்கு கூடியளவு திறமையிருந்திருந்தால், தமது தொழிலில் முன்னேற்றத்திற்கு உதவியிருக்கும் என உணர்ந்துள்ளனர் என இவ்வறிக்கை தெரிவிக்கின்றது.

## உடற்பருமனை ஏற்படுத்தும் உணவுகள் தடையாகலாம்

சிறுவர்களுக்கு உடற்பருமனை ஏற்படுத்தக்கூடிய உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் விடயங்களில் சில கெடுபிடிகளை ஏற்படுத்த நகரசபை நிர்வாகம் ஆராய்ந்து வருகின்றது. நகர சுகாதாரப் பிரிவு அதிகாரிகள் மேற்படி உணவு வகைகள் தொடர்பான ஒரு அறிக்கையை உயர் மட்டத்துக்குச் சமர்ப்பித்துள்ளனர். பாடசாலை உணவுச்சாலைகளில் விற்பனையாகும் சிற்றுண்டிகளும் இவர்களின் கவனத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.



றஞ்சி திரு

## சின்னச் சின்ன தகவல்கள்

ஒன்ராறியோ மாகாணத்தின் பல ஆரம்ப பாடசாலைகள் மூடப்படவுள்ளன. முன்னாள் முதல்வர் மைக் ஹரிஸ் முன்னர் எடுத்த நடவடிக்கையை, டால்ரன் மக்கன்ரி அரசு தொடரவுள்ளது. ஒவ்வொரு பாடசாலைக்குமான மாணவர் இலக்கை (தொகை) அடையாத பாடசாலைகள் மூடப்படும். அங்கு தற்போது கல்வி பயிலும் மாணவர்கள் கிட்டவுள்ள பாடசாலைகளுக்கு மாற்றப்படுவர். மூடப்பட வேண்டிய பாடசாலைகளை அந்தந்தப் பிரதேச கல்விச் சபைகளே விரைவில் தீர்மானிக்கும்.

சாரதிகள் பயிற்சி நிலையங்களின் போதனைத் திட்டத்தில், முன்னேற்றமான மாற்றங்களைக் கொண்டுவரப் போவதாக ஒன்ராறியோ அரசாங்கம் அறிவித்துள்ளது. G1 எனப்படும் ஆரம்ப சாரதி பயிற்சி வகுப்புகளை நடத்தும் எந்த நிலையமும் புதிய நடைமுறைகளுக்குக் கட்டுப்பட வேண்டியது அவசியமாக்கப்படுகின்றது. தற்போதைய 35 மணித்தியால சாரதி பாடப் போதனை 40 மணித்தியாலங்களாக்கப்படவுள்ளது. சட்டப்படி இயங்காத நிலையங்களின் அனுமதிப் பத்திரம் உடனடியாக ரத்தாகும். ஏற்கனவே சில ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

அமெரிக்காவில் பிரபல்யமாக இருக்கும் 'ஆப்பிள் ஐபோன்' (apple's popular iphone) விரைவில் கனடாவில் விற்பனைக்கு வரவுள்ளது. கனடாவில் றோஜர்ஸ் நிறுவனம் இதன் உரிமத்தைப் பெற்றுள்ளது. எப்பொழுது விற்பனைக்கு வரும், இதன் விலை என்ன என்னும் விபரங்கள் இதுவரை அறிவிக்கப்படவில்லை. நவீன தொழில்நுட்பங்களைக் கொண்டதான இந்த 'ஐபோன்' விற்பனைக்கு வரும்போது, இங்கு ஏற்கனவே விற்பனையிலுள்ள கைத்தொலைபேசிகள் மவுசு இழக்குமென்று பரவலாகப் பேசப்படுகின்றது.

கனடாவில் எரிபொருளின் விலை 'ஆனை விலை, குதிரை விலை' போல அதிகரித்துச் செல்கின்றது. கடந்த மாத இறுதி நாட்களில் ஒரு லீட்டர் 122.6 ஆக விற்னையானது. இந்தக் கோடை காலத்தில் லீட்டர் 140.00 வரை அதிகரிக்கலாமென எதிர்வு கூறப்பட்டுள்ளது. உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை கிடுகிடுவென உயர்ந்து வருவதே இந்த அதிகரிப்புக்குக் காரணமென்று அரசாங்கம் கூறுகின்றது

ஆசனப்பட்டி அணியத் தவறிய 11,000 வாகனச் சாரதிகள் தண்டம் செலுத்துவதுடன் புள்ளிகளையும் இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். ஒன்ராறியோ மாகாணப் பொலிசாரால் (OPP) ஏப்ரல் 16ம் திகதிக்குப் பின்னரான ஒன்றரை வார காலத்துள் சோதனையிடப்பட்ட 62,000 சாரதிகளில் 11,000 பேர் அகப்பட்டுள்ளனர். இந்தக் காலப்பகுதியில் 4 பேர் இதனால் மரணமடைந்துள்ளனர். வாகனங்களில் பயணம் செய்த வேளையில் ஆசனப்பட்டி அணியாதிருந்த 4,900 பேர் தண்டப்பணம் செலுத்த நேர்ந்தமையும் குறிப்பிடத்தக்கது. 2007ஆம் ஆண்டில் ஆசனப்பட்டி அணியாததால் 117 பேர் மரணமாகினர் இது, 2006ஆம் ஆண்டிலும் 30 வீதம் அதிகம்.

ரொறன்ரோ பெருநகரின் சில வீதிகளில் விரைவில் இரட்டைத் தட்டு (Double Decker) பேருந்துகள் ஓடப்போகின்றன. GO Transit போக்குவரத்து நிர்வாகம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது. 403 மற்றும் 407 பெருந்தெருகளுக்குச் சமனாகச் செல்லும் வீதிகளில் இந்தச் சேவை முதலில் ஆரம்பிக்கும். ஓக்வில் ரயில் நிலையத்திலிருந்து யோர்க் பல்கலைக் கழகம் வரையானதாக இச்சேவை அமையும். இதற்கெனப் பன்னிரண்டு இரட்டைத் தட்டு பேருந்துகள் இந்த மாத இறுதிக்குள் வந்து சேரவுள்ளன.

ரொறன்ரோ நகரில், ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாகக் (ESL) கற்கும் சுமார் முப்பதாயிரம் வளர்ந்தோர், அதனை இழக்கும் அபாயம் உருவாகியுள்ளது. ரொறன்ரொ கல்விச் சபை இந்த வகுப்புகளை நிதிப் பற்றாக்குறையினால் நிறுத்தும் தீர்மானத்தை எடுத்துள்ளது. இது அரசினால் ஏற்கப்படுமானால், சுமார் முப்பதாயிரம் வளர்ந்த மாணவர்களும் ஆங்கிலக் கல்விப் போதனையை இழக்க நேரிடும். தொடர்கல்வி வகுப்புகளைப் படிப்படியாக மூடும் திட்டத்தை ஒன்ராறியோ மாகாண அரசு நடைமுறைப்படுத்த உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகாஜன முன்னாள் அதிபர்
பொ. கனகசபாபதி

# இலங்கா தரிசனம் - நவரசம் - 4

வீடு வந்தோம். எனது பொதிகளைப் பெரிய மகள் எடுத்து உள்ளே கொண்டு செல்வதற்கு முன்னர் சின்னமகள் என்னைப் பார்த்து "அப்பா" என்றாள் வாஞ்சையாக. என்ன என்றேன். "அப்பா! வருடம் பிறந்த பின் முதல் முதலாக இப்போ தான் வீடு வருகிறீர்கள் ஆகவே எதற்கும் கோபிக்க வேண்டாம்" என்றாள். எதற்காக இவள் அத்தனை பீடிகை செய்கிறாள் என்ற எண்ணத்துடன் இறங்கினேன். சப்பாத்தினைக் கழற்றிய பின்னர் நேராக முன் விறாந்தையை நோக்கி எனது செவ்வரத்தைகளைப் பார்க்கச் சென்றேன். பக்கென்றது. என் முகத்தில் தோன்றியது, திகைப்பா, வெறுப்பா, ஏமாற்றமா? செவ்வரத்தைகள் அத்தனையும் வள்ளலாரை எனக்கு நினைவூட்டின. 'வாடிய பயிரைக் கண்டு வாடினேன்' என்றார் வள்ளலார். வாடினேன் நான். அத்தனையும் பரிதாபமாக தலைவிரி கோலமாக நின்றன. சில இலைகளை உதிர்த்த நிலையிலும், வேறு சிலவற்றில் இலைகள் காய்ந்து சருகாகும் நிலையிலும், இன்னும் சில வெள்ளைப் பூச்சிகளால் ஆரோகணிக்கப்பட்ட நிலையிலும் காணப்பட்டன. கழிவிரக்கம் மிகுந்தது.

அவர்களை வெறுப்புடன் நோக்கினேன். காரணம் சொன்னார்கள். உள்ளே வைக்கின்ற தாவரங்களை நாம் சற்றுக் கவனிக்கத் தவறினால் வெள்ளைப் பூச்சிகள் (White flies) தாராளமாகக் கவனிக்கத் தொடங்கி விடும். தாராளமாக இலை எங்கும், பெரும்பாலும் இலையின் கீழ்ப்புறத்தில் நிரம்பிவிடும். சவர்க்கார கலவை அல்லது எண்ணை மூலமாகவே அவற்றினை அகற்றலாம். அவை மிக அதிகமாக இனம் பெருகும் தன்மை உடையவை. இவர்கள் நீர் ஊற்றப் போனபோது அவை எல்லா இடமும் பறந்து இவர்களுக்கு வரவேற்புக் கொடுக்க இவர்களுக்கு ஏற்பட்ட வெறுப்பு அந்தப் பக்கம் செல்வதையே நிறுத்திவிட்டது. நீர் ஊற்றுவதையே நிராகரிக்க வைத்து விட்டது. நான் என்ன செய்யலாம்?

பீபஸ்த இரசம் எப்போது ஏற்படுகின்றது? வெறுப்பு விளைவிக்கின்ற செய்திகளைக் கேட்பது, பார்ப்பது, புண்படுத்துகின்ற செய்திகளைக் கேட்பது யாவும் பீபஸ்தத்தின் விபாவங்கள் என்கிறார் பரத முனிவர். ஆனால் அவர் அதற்கான சஞ்சாரி பாவம் நிறைய நேரம் நிலைத்து நிற்காது என்றார். எனக்கு அந்த வெறுப்பு நிலை போகப் பல நாட்கள் எடுத்தன. அதாவது எனது செவ்வரத்தைகளைப் பழைய நிலைக்குக் கொண்டு வரும் வரை.

<u>7.பயம் (பயானகம்):</u> ஸ்ரீலங்காவிற்குச் செல்பவர்கள் யாராவது சென்னையை எட்டிப் பாராமல் வருவார்களா? நானும் செல்வது எனத் தீர்மானித்தேன். திரு ஈஸ்வரனின் உதவியால் மிக எளிதாக இந்தியா செல்வதற்கு வேண்டிய நுழைவுரிமை கிடைத்தமையால் பிரயாணம் சுலபமாயிற்று. அங்கு எனது மாணவன் வைத்திய கலாநிதி செந்தில்மோகன் புதிய வகையான தொண்டு நிறுவனம் ஒன்றினை நடத்திக் கொண்டிருக்கிறான். இவன் ஒரு அதியசயப் பிரகிருதி. 1999ஆம் ஆண்டினிலே தனது இளம் மனைவி சகிதம் கனடா வந்தான். அவரும் வைத்திய கலாநிதியே. இருவருமாக 2000ம் ஆண்டு தொடக்கம் ஆறு வருடங்கள் இங்கு தொழில் பார்த்தனர். உழைத்தது போதும் இனி ஊர் திரும்புவோம் எனத் திட்டமிட்டு தமது இரு பெண் குழந்தைகளுடன் திரும்பி விட்டனர். இப்போது நாட்டின் நிலைமை சீரானதாக இல்லாமையால் சென்னையிலேயே தங்கியுள்ளனர். அவரது மனைவி இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியில் துணைப் பேராசிரியராகக் கடமையாற்றுகிறார். இங்கு புலம் பெயர்ந்த மருத்துவர்கள் எவருமே செய்யாத ஒன்று இது. 24 மணித்தியாலமும் ஓடி ஓடி உழைத்துக் கொண்டிருப்பவர்கள் பலர் மத்தியில் இவர்களைப் போலல்லாது வெறும் ஆறு வருடங்கள் மாத்திரமே இங்கு உழைத்த பின்னர் அது போதும் நாடு திரும்புவோம் என எண்ணுவதற்கு எத்தனை போதும் என்ற மனம் வேண்டும். அதற்கு மன வைராக்கியம் ஒருவருக்குத் தேவை.

இத்துடன் நின்று விட்டானா அவன்? மனைவி மாத்திரம் தான் இப்போ வேலை பார்க்கிறார். இவன் கொஸ்மோஸ் (Cosmos) எனும் ஒரு நிறுவனத்தினை உருவாக்கி நிர்வகித்து வருகிறான். அது என்ன செய்கிறது? வெளி நாடுகளிலே இருந்து வைத்தியத் தேவைகள் உள்ளவர்கள் இவனுடன் தொடர்பு கொண்டால் இவன் அவர்களை விமான கூடத்திற்குச் சென்று அழைத்து வந்து தேவையானால் தங்குவதற்கு இடவசதி கூடச் செய்து கொடுப்பதுடன் அவர்களுக்கு உகந்த வைத்தியசாலையில் மருத்துவம் செய்வதற்கும் ஏற்பாடுகளையும் செய்து கொடுக்கிறான். அவர்களிடம் ஒரு செல்லாக் காசு கூட ஊதியமாகப் பெறுவது இல்லை. மேலும் அவர்கள் வைத்தியசாலைக்கான கட்டணத்தை இந்தியப் பணம் மூலம் செலுத்துவதற்கும் அனுமதி பெற்றுக் கொடுப்பான். ஆச்சரியமாக இருக்கிறதா? இது தான் அவன்!!

நான் ஸ்ரீலங்கா செல்கிறேன் என அறிந்ததும் தன்னுடன் வந்து சிலநாட்களாவது தங்கவேண்டும் எனப் பணித்தான். சென்றேன். தங்குவதற்கும் இடவசதி செய்துவிட்டான். ஆகவே வழமையாக நான் தங்கும் எனது மைத்துனரும் அப்பொலோ மருத்துவசாலையில் பணியாற்றுபவருமான வைத்தியகலாநிதி அரியநாயகத்தின் இல்லத்தில் பகல் வேளைகளிலும் இவனுடன் இரவு வேளைகளிலும் தங்க வேண்டியதாயிற்று. வந்துவிட்டீர்கள் கட்டாயமாக உங்களது உடல் நிலைபற்றி மருத்துவ சோதனை செய்ய வேண்டும் எனக் கட்டாயப்படுத்தி இராமச்சந்திரா மருத்துவசாலைக்கு அழைத்துச் சென்று விட்டான். ஏறக்குறைய எல்லாச் சோதனைகளும் முடிய ஒன்றரை நாள் வரை எடுத்தது. சோதனை முடிவுகள் அறிக்கையாகத் திருமதி செந்தில் மோகனுக்கு வந்தன. என் உடல் நிலை மேலும் மோசமடையவில்லை என்பது ஆறுதல் தரும் உண்மை. கண்பார்வை அண்மைப் பார்வை +3.75லும் சேய்மைப் பார்வை +1.50லும் இருந்தன. கண்வைத்தியருக்கே இது ஆச்சரியமாக இருந்தது. என்னைக் கேட்டேவிட்டார்? உனக்குச் சலரோகம் 30 வருடங்களாக உள்ளது என்கிறாய், உனது கண்பார்வை சீர் குலையாமல் அப்படியே இருப்பதன் மர்மம் என்ன? நீ உணவில் மிகக் கட்டுப்பாடாய் இருக்கிறாய் போல உள்ளது. அப்படியே தொடர் என்றார். அம்மா அப்படி வாழ்த்தாதேயுங்கள். நான் என்றுமே உணவில் கட்டுப்பாடாய் இருந்ததில்லை. உணவுக்கு நான் அடிமை. ஆனால் சலரோகம் என்மேல் எப்படியோ கருணை காட்டிக்கொண்டு வருகிறது. நான் கண்ணினை மிகக் கவனமாக உபயோகிக்கிறேன் என்றேன். எப்படி என்றார். நான் நிறையவே அரங்கேற்றங்கள், கலைநிகழ்ச்சிகளுக்குச் செல்வதுண்டு. ஆனால் அதிக நேரம் கண்களை மூடியபடியே இருப்பேன். என் பிள்ளைகள் நான் தூங்கிவிட்டேனோ எனச் சந்தேகப்பட்டார்கள். இப்போ அவர்களுடன் என் பேத்தியும் சேர்ந்து விட்டார் எனறேன். உணவில் கவனம் எடு. பின்னர் அனுபவிக்க வேண்டி வரும் என்றார். இது ஒன்று தான் நான் என்றுமே வரவேற்க விருப்பம் காட்டாத ஆலோசனை!

கண்ணாடி வாங்குவதில் தான் நான் சற்று ஏமாந்து விட்டேன் போலத் தெரிகிறது. ஒரு சிறந்த நிறுவனம். அங்கே கண்ணாடியை எடுத்து வரலாம் எனச் சென்றேன். ஒரு இளம் பெண் எல்லா அளவுகளும் பார்த்துவிட்டு, கண்ணாடியின் ஒவ்வொரு அம்சமாகக் கூறி இது வேணுமா, அது வேணுமா என ஒவ்வொன்றாகக் கேட்டார். எனக்கோ ஒரு மண்ணும் புரியவில்லை. விளக்கம் கேட்பது கனடாவில் வாழ்பவருக்கு அவமானம் போலத் தெரிந்தது. ஆகவே எல்லாவற்றினுக்கும் ஆம் சொல்லிவைத்தேன். இறுதியில் 16,000 ரூபா என்றார். சென்ற

(22ம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடிய 'தமிழ் மிறர்' பயனுள்ள ஒரு கூடல்








கனடிய 'தமிழ் மிறர்' ஆங்கில மாதப் பத்திரிகையின் ஒன்றுகூடல் 'Tamil Mirror Nite' என்ற மகுடத்தில் கடந்த மாதம் 20ஆம் திகதி பிற்பகல் மார்க்கம் பொதுமண்டபமொன்றில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மனித உரிமைகள் விவகார வழக்கறிஞர் கரேன் பார்க்கர் சிறப்பு விருந்தினராகப் பங்குபற்றி, இலங்கையின் இன்றைய நிலைமை பற்றி எடுத்துரைத்தார். இலங்கைத் தமிழர்கள் சுயநிர்ணய உரிமையுடன் தங்கள் தாயக பூமியில் சுதந்திரமாக வாழ்வதற்கான சகல உரிமையும் அவர்களுக்குண்டு என்று தமதுரையில் முக்கியமாகக் குறிப்பிட்டார். வரவேற்புரையை பத்திரிகையின் வெளியீட்டாளர் சார்ள்ஸ் தேவசகாயம் நிகழ்த்தினார். அடுத்து ஆசிரியர் உரை இடம்பெற்றது. பத்திரிகை எழுத்தாளர்கள், விளம்பரதாரர்கள், தொண்டர்கள் நினைவுப் பரிசுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர், வழக்கறிஞர் நாதன் சிறீதரனின் பாரியார், கரேன் பாக்கருக்கு தங்கப் பதக்கம் சூட்டிச் சிறப்பு செய்தார். 'தமிழ் மிறர்' வழங்கிய ஊடகத் துறைக்கான விருதினை ஒலிபரப்பு/ஒளிபரப்புத் துறையைச் சேர்ந்த பி. விக்னேஸ்வரனும், இளம் தலைமைத்துவ விருதினை சிறந்த பாடகியான சிறீபிருந்தா அருந்தவசண்முகநாதனும் பெற்றுக் கொண்டனர். இரவு விருந்துடன் வைபவம் முடிவுற்றது.
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Canadian report recommends sanctions against Sri Lanka







A citizens report compiled by Canadian lawyers and Canadian Tamils released last month in Scarborough, during a Conservative Party fundraising dinner, recommended that Canadian Government impose economic and diplomatic sanctions against Sri Lanka. Pointing out the "collapse of the Rule of Law," and "[t]he grievous violations of basic human rights and virtual elimination of due process," the report also urged Canada to "[s]upport the international call to appoint a United Nations Special Envoy for Sri Lanka to monitor and guard against human rights abuses and to assist the peace process, as recommended by the UN High Commissioner for Human Rights." Mr. Chuck Konkel, a conservative candidate who hopes to run for the federal riding of Scarborough- Guildwood, said he will work with Canadians until they understand very clearly the nature of the conflict in Sri Lanka and the need for Canadians to get involved. Mr. John Legge, a lawyer specializing in Human Rights and the Democratic Application practice of the Rule of Law, Prof. Joseph Chandrakanthan attached to the University of Toronto and a consultant in Bioethics, and Ms. Karen Parker, American Civil Rights lawyer, also spoke at the event.

# அகஸ்தின் ஜெயநாதனின் நூல் வெளியீடு






கடந்தாண்டு அமரரான சமூகச் சிந்தனையாளர் அகஸ்தின் ஜெயநாதனின் கட்டுரைகளைத் தாங்கிய நூலொன்று கடந்த மாதம் 25ஆம் திகதி வெளியிட்டு வைக்கப்பட்டது. சேக்கம் தலைவர் டேவிட் ஜெயசிங் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், ஆங்கிலக் கட்டுரைகள் பற்றிய உரையை திரு. மனோ தில்லைநாதனும், தமிழ்க் கட்டுரைகள் பற்றிய உரையினை கலாநிதி த. வசந்தகுமாரும் நிகழ்த்தினர். நூலில் இடம்பெற்ற தமிழ்க் கட்டுரைகள் திரு. அகஸ்தின் ஜெயநாதனால் 'தமிழர் தகவல்' ஆண்டு மலர்களில் எழுதப்பட்டவை. நூலின் முதற் பிரதி திருமதி. அஞ்சலா ஜெயநாதனிடம் வழங்கப்பட்டது. வழக்கறிஞர்கள் ஹரி ஆனந்தசங்கரி, மனுவல் ஜேசுதாசன், திருவாளர்கள் பீட்டர் குறொஸ்பி, சிவா சிவப்பிரகாசம், மிச்செல் அல்பர்ட், அன்ரன் ஜெயநாதன் ஆகியோரும் உரையாற்றினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயக கர்ப்பிணித் தாய்மார் நலம் காப்போம் ரொறன்ரோவில் 65,000 டாலர்கள் சேகரிப்பு

## IMHO அமைப்பின் முயற்சிக்கு அமோக ஆதரவு!

IMHO என்பது International Medical Health Organisation என்பதன் சுருக்கம். அனைத்துலக மருத்துவ உடல் நலத்துக்கான அமைப்பு என்பது இதன் தமிழாக்கம். இந்த அமைப்பு தாயக உறவுகளுக்கான நல்ல சில பணிகளைக் குறுகிய காலத்தில் நிறைவேற்றி யுள்ளது. தற்போது அங்குள்ள கர்ப்பிணித் தாய்மாரின் நலம் காப்பதற்கான செயற்திட்ட மொன்றினை மேற்கொண்டுள்ளது. இது தொடர்பான விபரமான ஒரு கட்டுரை கடந்த மாத ;தமிழர் தகவல்' இதழின் மூன்றாம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டது. மேற்படி அமைப்பு தனது பணிக்கான ஆதரவைக் கனடிய மக்களிடம் கோரியுள்ளதன் முதலாவது நிகழ்வு கடந்த மாதம் ஸ்காபரோ அட்லான்டா மண்டபத்தில் நடைபெற்றது. இரவு உணவுடன் சேர்ந்த ஒன்று கூடலாக, சில கலை நிகழ்ச்சிகளுடன் இது ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அமைப்பின் முக்கிய சிலரும் உரையாற்றினர். இந்த நிகழ்ச்சியின் வாயிலாக சுமார் 65,000 டாலர்கள் தாயக கர்ப்பிணித் தாய்மார் நலம் காப்போம் திட்டத்துக்குச் சேர்ந்தது. கனடியத் தமிழர் சமூகத்தின் பல துறைகளையும் சேர்ந்த ஆர்வலர்களை இந்நிகழ்வில் காண முடிந்தது.






















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மடுமாதா ஆலய பாதுகாப்புக்காக கனடாவில் 12 மணிநேர சிறப்பாராதனை





மன்னார் மடுமாதா தேவாலயத்தின் திருச்சொரூபத்தை அங்கிருந்து ஆலயக் குருமார் எடுத்துச் செல்ல நேர்ந்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட மனச் சஞ்சலத்துக்கு ஆறுதல் அளிக்கும் வகையிலும், அதன் பாதுகாப்பை வேண்டியும் ரொறன்ரோ தமிழ்க் கத்தோலிக்க சமூகத்தினர் 12 மணித்தியால சிறப்பாராதனை நிகழ்வொன்றினைக் கடந்த மாதம் 5ம் திகதி ரொறன்ரோ புனித ஆரோக்கிய அன்னை தேவாலயத்தில் நடத்தினர். ஆராதனையை வணபிதா ஜோசப் சந்திரகாந்தன் அடிகளார் தலைமையில் பல மதகுருமார்கள் ஒன்று சேர்ந்து நடத்தினர். மடுமாதா ஆலயச் சம்பவம் தொடர்பாக வத்திக்கானிலுள்ள பாப்பாண்டவருக்கும், கனடிய மத்திய அரசுக்கும் பொதுமக்கள் கையொப்பத்துடனான மகஜர்கள் கையளிக்கப்பட்டன. திருவாளர்கள் சக் கொங்கொல், திரு எஸ் திருச்செல்வம், அன்ரன் பீலிக்ஸ், கலாநிதி. பவன் சிறீஸ்கந்தராஜா, பொன். பாலராஜன் ஆகியோர் இங்கு உரையாற்றினர்.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரி
# சிவத்தமிழ் விழா - 2008










கனடா சிறீ வரசித்தி விநாயகர் ஆலயமும், வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரியும் இணைந்து நடத்திய 'சிவத்தமிழ் விழா - 2008' கடந்த மாதம் இருபதாம் திகதி கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. மாணவர்களின் ஆடல் பாடல் நடனம் வில்லுப்பாட்டு பேச்சு நாடகம் என்று பல கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. விருந்தினர்கள், கல்லூரி ஆசிரியர்கள் ஆகியோரின் உரைகள், அந்தணப் பெருமக்களின் ஆசி என்பனவும் இடம்பெற்றன. கல்லூரியின் நிறுவனர் சிவசிறீ பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள் விழாவுக்கான சகல ஏற்பாடுகளையும் சிறப்பாகச் செய்திருந்தார்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது உங்களுக்கு...!




வீடு வாங்கும் போதோ அல்லது விற்கும் போதோ
இந்த சன்மானம் உங்களுக்கு உறுதியாகிறது!
(நேரடியாக தொடர்பு கொள்பவர்களுக்கு மாத்திரமே)

HomeLife/ Future Realty Inc.
Realtor Member
262 Markham Road
Scarborough, ON M1J 3C5





# ரொறன்ரோ மத்தி கலை பண்பாட்டுக் கழக நாட்டுப்பற்றாளர் நினைவு முத்தமிழ் விழா

ரொறன்ரோ மத்தி கலை பண்பாட்டுக் கழகம், நாட்டுப்பற்றாளர் நினைவாக அன்னை பூபதி நினைவு மாத முடிவின்போது முத்தமிழ் விழாவொன்றினைக் கடந்த மாதம் ரொறன்ரோவில் நடத்தியது. அன்னை பூபதிக்கான மலர் வணக்கத்தினையடுத்துக் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. வானம்பாடிகள் இசைக் குழுவினரின் தேசிய-விடுதலைப் பாடல்கள் விழாவின் முன்னரைப் பகுதியை வெற்றியாக்கியது. பின்னரைப் பகுதியில் மாணவிகளின் தனி நடனம், குழு நடனங்கள், வளர்ந்தோரின் பாடல்கள் அபிநயம் என்பன இடம்பெற்று விழாவை நிறைவு செய்தது. தமிழர் தகவல் முதன்மை ஆசிரியர் திரு எஸ். திருச்செல்வமும், மற்றொரு பிரமுகரும் கள - புல நிலைவரங்களை விளக்கிக் கூறி, மக்களின் தொடர்ச்சியான பங்களிப்பின் அவசியத்தை வலியுறுத்தினர். ரொறன்ரோ மத்திய பிரதேச மக்கள் பெருமளவில் இங்கு கூடியிருந்தனர்.

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவாஜினி பாலராஜன்

# பெண்ணின் பொழுது - 2



கடதாசி என்பது நாளாந்த வாழ்வில் பல தேவைகளுக்கு நாம் உபயோகிக்கும் ஒரு பொருள். எனினும் இந்தக் கடதாசியை நாம் எவற்றுக்கு உபயோகிக்கிறோம் என்று பார்த்தால், பிரமிப்பாகத் தான் இருக்கும். இது எழுதி, படிக்க உதவுகிறது. ஒரு தொடர்பு சாதனமாகவும் (communication medium) இது உதவுகிறது.

பணம் கூட இந்த கடதாசியில் தான் அச்சிடப்படுகிறது. அலங்காரத்திற்கான கைவினைப் பொருட்கள் செய்யவும் இத்னை உபயோகிக்கலாம். இப்படிப் பல்வேறு விதங்களில் கடதாசி பயன்பட்டு வருகிறது.

யப்பானியர்களின் ஒரிகாமி (origami) எனப்படும் கடதாசியை மடித்து, உருவங்கள், வடிவங்கள் செய்யும் முறையும், கிரிகாமி (kirigami) எனப்படும் கடதாசியை அழகிய வடிவங்களில் வெட்டும் முறையும் மிகவும் பிரசித்தி வாய்ந்தவை.

ஒரிகாமி, கிரிகாமி என்பவை தவிர, குயிலிங் (Quilling or paper filigree) எனப்படும் ஒரு வித்தியாசமான முறையில் கடதாசி கொண்டு அழகான உருவங்கள், படங்கள் ஆக்கப்படுகின்றன.

கடதாசியை நீளமான துண்டுகளாக வெட்டி, உருட்டி, விரலினால் வித்தியாசமான வடிவங்களில் நசித்து, பூக்கள் அல்லது விலங்குகளின் வடிவங்களில் ஒட்டிகள் செய்யும் முறையே குயிலிங் எனப்படும்.

குயிலிங் 16ம் 17ம் நூற்றாண்டில் இத்தாலியப் பெண் துறவிகளினால் ஆரம்பிக்கப்பட்டது. அவர்கள் இம்முறையை உபயோகித்து தமது சமய நூல்களின் அட்டைகளை அலங்கரித்ததாகச் சொல்லப்படுகிறது.

1700 ஆம் ஆண்டளவில் இங்கிலாந்தில் குயிலிங் மிகவும் பிரசித்தி பெற்ற ஒரு கலையாக விளங்கியதாகவும், தையற்கலையுடன் சேர்த்து இக்கலையும் பாடசாலைகளில் இளம் பெண்களுக்குப் புகட்டப்பட்டதாகவும் சரித்திரம் சொல்கிறது.

பெண்களின் ஆக்கபூர்வமான அழகியற் சிந்தனையைச் சித்தரிக்கும் ஒரு கலையாக குயிலிங் விளங்குவதாக 18ம் நூற்றாண்டுப் பெண்கள் பற்றிய நூலில் (New Lady Magazine) விபரிக்கப்பட்டுள்ளது. இன்று கூட அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் இக்கலை நன்கு மேலோங்கியுள்ளது.

இத்துடன் சில படங்கள் இணைக்கப்பட்டுள்ளன. இவை குயிலிங் முறையில் ஆக்கப்பட்ட சில அலங்கார வாழ்த்துகள். குயிலிங் செய்யும் முறையை அடுத்த இதழில் பார்ப்போம்.




HERITAGE
Education Funds
RESP
SAVINGS PLAN
கல்விச் சேமிப்புத் திட்டம்

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

it's a more flexible plan

EDUCATION IS
A GREAT GIFT FOR
YOUR FUTURE GENERATIONS


உங்கள் பிள்ளைகளின்
கல்விக்கான சேமிப்பு உங்கள்
எதிர்கால தலைமுறைக்கான முதலீடு

WWW.KERUDAVIL.COM

INCOME TAX
PREPARATION

Personal Income Tax
Small Business Income Tax
Computerized Returns

Graphic Land - 647. 219. 7576



S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer

416. 841. 1866
416. 955. 9303
E.mail: ganthiy@rogers.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கா தரிசனம்..

முறை அங்கு சென்ற போது எடுத்த கண்ணாடி இப்போதும் உபயோகத்திற்குத் தயார் நிலையில் உள்ளது. அதற்கு நான் கொடுத்த விலை வெறும் 2500ரூபா மாத்திரமே. இம்முறை? அது வேண்டாம் எனக்கூற எனது தற்பெருமை இடங்கொடுக்கவில்லை. காசைக் கொடுத்து  வாங்கிவந்து விட்டேன். அதற்கான வசவு சென்னையில் திருமதி செந்தில் மோகன் தொடக்கம் ரொறன்ரோவில் எனது பிளைளைகள்  வரை நீண்டது. அநியாயமாக இத்தனை காசைத் தொலைத்துவிட்டீர்களே என்பது. ஆனால் நான் அக்கண்ணாடிக்கு ஒரு தனிக் கௌரவம் கொடுத்துள்ளேன். விசேட தினங்களில் மாத்திரம் அதனை அணிவேன்.

சலரோகத்துக்கான சோதனை முடிவுகளைத் திரு. திருமதி செந்தில் மோகன் பார்த்துவிட்டு ஒருங்கே கத்தினார்கள். என்ன சேர் இந்த உச்சத்தில் வெல்ல அளவு உள்ளதே, என்ன சேர் நீங்கள் என்றார்கள்? அறிக்கை பட்டினி நிலயில் 264 காட்டியது. சாமான்ய நிலையில் காட்ட வேண்டியது 70-110. நான் கொழும்பிலே கல்யாண வீட்டிற்காக வந்தனான் எல்லே. கொஞ்சம் சாப்பாடு அப்படியும் இப்படியுமாகத் தான் இருந்தது. ஆகவே இப்ப மாத்திரம் அப்படி இருக்கும். ஸ்ரீலங்கா வருவதற்கு முன் அப்படி எல்லாம் இருந்ததில்லை என்றேன். அப்போதைக்குச் சமாளித்து விட்டேன் என்ற எண்ணம். சரி நாளை கடந்த மூன்று மாதச் சாரசரி வரும் தானே அப்போ பார்த்தால் தெரிந்துவிடும் என்றான் செந்தில்மோகன். அந்த அறிக்கையும் வந்தது. அது எனக்குப் படு துரோகம் செய்துவிட்டது. முதல் நாள் அறிக்கையினுக்கு இது கொஞ்சம் கூட விட்டுக் கொடுக்கவில்லை. ஏறக்குறைய அதே நிலையைத்தான் இதுவும் காட்டியது. இருந்தது 326 இருக்க வேண்டியது 80-140. ஆகவே மீண்டும் என்ன சேர் இது?  என்றார்கள். நான் கீழே பார்த்தேன். எடுக்கிற மெற்போர்மினை இரண்டாக்கச் சொல்லிவிட்டு உணவில் சற்றுக் கவனமாகவும் இருக்கச் சொன்னார்கள்.

ஒரு ஆச்சரியம் என்னவென்றால் இங்கே வைத்தியசாலையிலே வைத்தியர்களாக நோயாளிக்கு உணவில் கட்டுப்பாடு பற்றிப் போதிக்கும் அவர்களே பின்னர் வீட்டிலே சாப்பிடுங்கோ சாப்பிடுங்கோ என நிறையவே ஊட்டுவார்கள். அங்கே விருந்தோம்பல் ஏனையவற்றினை எல்லாம்  மறைத்து விடுகிறது. என்ன செய்யலாம்?. பிடிக்க வேண்டியது தானே.

திருமதி செந்தில் மோகனின் உதவியாளர் அறையுள்ளே இருந்து எல்லாவற்றினையும் கவனித்துக் கொண்டிருந்தவர், திருமதி செந்தில் மோகன் விரிவுரை நிகழ்த்தச் சென்றதும் அங்கு நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி பற்றிக் கூறினார். எனக்கு வயிற்றைக் கலக்கியது. செய்தி இதுதான். சில நாட்களுக்கு முன்னர் ஒரு சலரோக நோயாளி சிகிச்சைக்காக வைத்தியசாலை வந்தாராம். அவருக்குச் சலரோகம் நீண்டகாலமாக இருந்தமையால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. வலக்காலின் கணுக்காலிற்குக் கீழ்ப்பகுதி சொரணை இல்லாமலே போய்விட்டது. இதனை இழைய அழுகல் (Necrosis) என்பார்கள். சலரோகத்தின் காரணமாக அங்கே காணப்படும் குருதிக் கலன்கள் சிதைவுற அப்பகுதிக்குக் குருதி செல்வது நின்று விடுகிறது. இதனால் அங்கே உள்ள இழையங்கள் போசாக்கு அற்றமையால் இறந்து விடுகின்றன. பார்த்தீர்களாயின் அப்பகுதி கன்னங்கரேலெனக் காணப்படும். அந்த நோயாளியை மாடியில் உள்ள அறுவை வைத்தியரிடம் செல்லுமாறு பணித்தார்களாம். அவர் மாடியில் ஏறிச் செல்லுகையில் அவரது காலின் கணுக்காலுக்குக் கீழான பகுதி அப்படியே கழன்று விழுந்து விட்டது என்றார். எனக்கு அஞ்சும் கெட்டு அறிவும் கெட்டது என்றால் மிகையல்ல. இதனைத் தற்துண்டிப்பு (Auto-amputation) என்பார்கள் என விளக்கினார்.

உங்களுக்கு ஞபாகம் இருக்கோ தெரியாது, ஊரிலே பல்லியை வாலிலே பிடித்தீர்களானால் அது உடனே ஒரு சிலிர்ப்புச் சிலிர்த்து விடும். உங்கள் கைகளில் அதன் வால்தான் சிறிது நேரம் துடித்தபடி காணப்பட பல்லி எதுவுமே நடக்காதது போன்று தன்பாட்டிலே போய்விடும். அந்த வாலினைத் தான் மீண்டும் வளர்த்து எடுப்பேன் என்ற நம்பிக்கை பல்லிக்கு உள்ளது. இது அதற்கொரு தற்காப்பு நடவடிக்கை. வாலிலே ஒரு இடம் முறிப்பதற்கென்றே உள்ளது. இந்த இடத்தில் உள்ள இழையங்கள் மீண்டும் வளரும் தன்மை உடையவை. இதனைத் தற்பிரிகை (Autotomy) என்போம். ஆனால் தற்துண்டிப்பு அப்படி அல்ல. போனது போனது தான்.

ஐயோ, நீண்டகாலமாக எனக்கும் சலரோகம் உள்ளதே. பயங்கரம். இந்த நிலை எனக்கும் ஏற்படுமா? பயம் பற்றிக் கொண்டது. இனிமேல் உணவில் சற்றுக் கட்டுப் பாட்டுடன் இருக்க வேண்டும் எனத் தீர்மானித்தேன். ஆனால் எனது துரதிர்ஷ்டம் இந்தப் பயம் நீண்டகாலம் என்னில் நிலைத்து நிற்கவில்லையே. எப்படி என்கிறீர்களா? நான் மீண்டும் சாப்பாட்டு இராமன் ஆகிவிட்டேன். இது நாள் வரை மதியவேளையில் சோறுதான் உட்கொள்கிறேன். இரவு வேளைககளில் புட்டு அல்லது இட்லி, தோசை. ஐந்தவித்தான் என்கிறார்கள் என்னால் இந்த ஒன்றையே அவிக்க முடியவில்லை!

யசோ சின்னத்துரை
கனடிய சட்டத்தரணி

வீடு
காணி
வர்த்தகச் சட்டம்

The Law Offices of
Yaso Sinnadurai
Barrister & Solicitor, Notary Public

Real Estate Law
Residential &
Commercial
Business Law

Tel: 416 265 3456    Fax: 416 265–2770

2100 Ellesmere Road, Suite 202, Scarborough ON  M1H 3B7 (Markham & Ellesmere)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*சிந்தனைப் பூக்கள்*
எஸ். பத்மநாதனின் தொடர் 20

# சிட்டுக்களே வாருங்கள்!

நீங்கள் பூக்களைப் போன்ற மென்மையானவர்கள், வண்ணத்துப் பூச்சி போல் எந்நேரமும் பறந்து திரிபவர்கள், பூஞ்சிட்டுக்கள் போல மகிழ்ச்சியாக வலம் வருபவர்கள். எனினும், நீங்கள் மனவலிமை படைத்தவர்களாகவும், புத்திசாலித்தனமானவர்களாகவும், தைரியசாலிகளாகவும் விளங்குவதற்கு உங்கள் பெற்றோர்களே உதவி செய்ய வேண்டியுள்ளது. அவர்களுக்கு இதுபற்றி சிந்தனையில்லாதுவிடினும் நீங்களே அவர்களை செயல்பட தூண்டுங்கள். இதற்காக மாமாவின் சில ஆலோசனைகளை பயன்படுத்தி பாருங்கள்.

நீங்கள் எதற்கெடுத்தாலும் கேள்வி கேட்டு துளைப்பவர்கள். இதற்கு உங்கள் பெற்றோர் எரிச்சலுடன் பதில் கூறாது உங்களை அதட்டினால் சற்றும் தளர்ந்து போகாதீர்கள். அவர்களை பொறுமையாக பதில் கூற வையுங்கள்.

சிட்டுக்களே உங்களை இன்னொரு சிட்டுவுடன் ஒப்பிட்டுப் பேச உங்கள் பெற்றோர் முயன்றால் அதற்கு அனுமதியாதீர்கள். நீங்கள் தனித்தன்மையுடையவர்கள். உங்களை மற்றவர்களுடன் ஒப்பிட்டால் உங்கள் மனவலிமையை பாதிக்கலாம். எனவே அவர்களுக்கு இதனை எடுத்து கூறுங்கள். நீங்கள் ஏதாவது கூற முற்பட்டால் அவர்கள் காது கொடுத்துக் கேட்காது விட்டால் அதுவும் உங்களைப் பாதிக்கும். பொறுமையுடன் அவர்களது காதில் இதனைப் போட்டு வையுங்கள்.

நீங்கள் சிலவேளைகளில் தவறு செய்பவர்கள் என்று மாமாவுக்குத் தெரியும். உங்கள் பெற்றோர்கள் இதனை மிகைப்படுத்தி கொண்டால் உங்கள் தன்னம்பிக்கை பாதிக்கப்படலாம். நீங்கள் தவறு செய்வதை தவிர்க்க பாருங்கள். தற்செயலாக தவறு செய்தாலும் அதற்காக மன்னிப்பு கோருங்கள். அவர்கள் அதனை மன்னித்து கொள்வார்கள்.

உங்கள் பெற்றோர் உங்களை 'உன்னால் முடியாது' என்று தடைபோட்டு விடுவார்கள். நீங்கள் தோற்றுப் போனாலும் பரவாயில்லை, உங்கள் பெற்றோரை வசப்படுத்தி காரியங்களை மேற்கொள்ளுங்கள்.

பூஞ்சிட்டுக்களே, உங்களது எந்த முயற்சியையும் அவர்கள் பாராட்டவில்லையா? அவர்களுக்கு அது விளங்கவில்லை என்றுதான் அர்த்தம். நீங்கள் செய்யும் சின்ன முயற்சியையும் அவர்கள் பாராட்டும் படியாக நடந்து கொள்ளுங்கள்.

உங்கள் பெற்றோர்கள் சிலவேளைகளில் உங்கள் பாடசாலை அனுபவங்களை கேட்காமல் விட்டு விடுவார்கள். நீங்களே முன்வந்து பவ்யமாக உங்கள் ஆசிரியர், நண்பர், படிப்பு விடயங்கள் என்பவற்றையும் ஒன்றும் விடாமல் சொல்லி விடுங்கள். பின்பு அவர்களே கேட்கத் தொடங்கி விடுவார்கள்.

உங்கள் பெற்றோரிடம் அறிவுபூர்வமான புத்தகங்களையும், விளையாட்டு சாமான்களையும் வாங்கி கொடுக்க கூறுங்கள். கதைப் புத்தகங்களை நூலகங்களில் பெற்றுக் கொள்ளுங்கள். எதிர்கால சிந்தனையாளராக நீங்கள் வருவதற்கு அவர்களை பயன்படுத்துங்கள்.

அன்பான சிட்டுக்களே. உங்கள் பெற்றோரின் மனோபாவம் தாங்கள் நினைக்கிறபடியே உங்களை வாழ வைப்பதுதான். ஆனால் உங்களால் அப்படி வாழ முடிவதில்லை. உங்களுக்கென்று ஒரு தனி உலகம் உள்ளது. உங்களின் மனநிலையை அவர்கள் புரிந்து கொள்ள தூண்டிப் பாருங்கள். மாமாவின் அன்புக் கட்டளைகள் இவைதான்.

மீண்டும் சந்திப்பேன்.

The Law office of
GARY
Anandasangaree

416 321 1100

Gary Anandasangaree
Barrister and Solicitor

10 Milner Busines Court
Suite: 210
Toronto, ON. M1B 3C6

Phone: 416 321 1100
Fax: 416 321 1107
gary@galaw.ca


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்

* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்' சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

**2466 Eglinton Avenue East, Unit:7**
**Scarborough, Ontario. MIK 5J8**
Monday to Saturday
Near Kennedy Subway (Rainbow VillageBuilding)

**(416) 266 5161**

**Main Square Dental Office**

7-2575 Danforth Avenue
Toronto, Ontario. M4C 1L5

**Dr. Shan - Tuesday (morning)**
**Dr. Yao San (Tue, Fri & Sat**
**Dr. Brian (monday)**
**Dr. May (wednesday)**

**(416) 690 0121**



*Shaping careers for over 15 years*

*Changing your life begins with us.....*

**EARLY CHILDCARE ASST. (ECA)**
100% Guarantied Co-op placement

**JOB OPPORTUNITIES**
- *Child Care Assistant*
- *Child Care Worker*
- *Day Care Worker / Teacher*
- *Preschool Worker*
- *Infant Day Care Worker*

**COMPUTERIZED ACCOUNTING**

**JOB OPPORTUNITIES**
- *Accounting Assistant*
- *Accounts Manager*
- *Accounts payable clerk*
- *Accounts Receivable Clerk*
- *Payroll clerk*

**PERSONAL SUPPORT WORKER (PSW)**
100% Guarantied Co-op placement

**JOB OPPORTUNITIES**
- *Personal Support Worker*
- *Home Support Worker*
- *Personal Care Attendant*
- *Resident Care Aid*
- *Nursing Assistant*

**MEDICAL OFFICE ADMIN (MOA)**

**JOB OPPORTUNITIES**
- *Medical Office Assistant*
- *Medical Admin. Asst.*
- *Medical Receptionist*
- *Medical Secretary*
- *Hospital Ward / Unit Clerk*

**BUSINESS ADMINISTRATION**

**JOB OPPORTUNITIES**
- *Administrative Assistant*
- *Office Assistant*
- *Office Administrator*
- *Management Trainee*
- *Executive Assistant*

**NETWORK ENGINEERING**

**JOB OPPORTUNITIES**
- *Network Administrators*
- *Systems Administrators*
- *Technical Support Specialists*
- *Helpdesk Support*
- *LAN Administrators*

*Week-ends & Evening Courses*
Canadian Security Courses,
QA / Software Testing, AccPac, Quick books, Ms Office,
Visual Basic, C++, Visual C#, .Net, A+, MCP, MCSE, CCNA

**Financial Assistance**
Financial Assistance may be available for those who qualify.
We welcome:
- ☐ Social Assistance receipients
- ☐ EI - currently receiving / received receipients
- ☐ Maternity benefits received receipients

# Computek College

**BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY**

**Kennedy / Sheppard**
(North-East Corner)
**Tel: 416-321-9911**
2347, Kennedy Road, Suite 301
Scarborough, ON., M1T 3T8

**Kennedy / Eglinton**
N/W Corner, Above Liberary
**Tel : 426.285.9941**
2390 Eglinton Ave East, Suite 248
Scarborough ON.,M1K2P5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். காந்தி 20

# வெள்ளிப் பணம் - டாலர்

இம்மாத வெள்ளிப்பண தொடர் கட்டுரையில் வெள்ளிப்பணத்துக்கும் உடல். உள ஆரோக்கியத்தினை பேணுவதற்கும் உள்ள தொடர்பினை பார்ப்போம் பொதுவாகவே நாம் ஒருவாரத்துக்கு 40 மணிநேரம் சராசரியாக வேலை செய்கின்றோம். சிலர் இரண்டு வகைப்பட்ட தொழிலைச் செய்து வாரத்தில் 60-80 மணிநேரம் தொழில் புரிகின்றார்கள். இவர்களுக்கு அவர்களின் உடல்நிலை திடகாத்திரமாக இருப்பது ஒரு காரணம். ஆகவே தேக ஆரோக்கியம் வெள்ளிப் பணத்தினை பெறுவதற்கு அவசியம் என்பதினை எவருமே மறுக்கமாட்டார்கள்.

இதே போல் தொழில் பார்க்கும் இடங்களில் அடிக்கடி உடல் ஆரோக்கியம் இல்லாத காரணத்தால் வேலைக்கு செல்லாமல் போகும் போது தொழிலை இழக்க வேண்டிய நிலை உருவாகலாம் அல்லது தொழில் சார்ந்த பதவி உயர்வுகள் சம்பள உயர்வுகள் தடைப்படலாம் நாம் இங்கும் உடல் ஆரோக்கியத்துக்கும் வெள்ளிப் பணத்துக்குமான நெருங்கிய தொடர்பினைப் பார்க்கிறோம்.

இக் கனடிய மண்ணில் எமது சமூகத்தினை சேர்ந்தவர்களும் ஏனைய சமூகத்தினை சேர்ந்தவர்கள் பலரும் இளைப்பாறும் வயதான 65 வயதினை கடந்தும் தொழில் பார்ப்பதினை காணக்கூடியதாக இருக்கும் அதேவேளை மறு பக்கத்தில் சிலர் 45-50 வயதிலே நோய்களின் பாதிப்பு காரணமாக நிரந்தரமாக தொழில் பார்க்க இயலாதவர்களாக இருப்பதினையும் காண முடிகின்றது. இதன் மூலம் உடல் ஆரோக்கியம் வெள்ளிப்பணத்துடன் நெருங்கிய தொடர்புகளை கொண்டுள்ளது.


இந்த வகையில் நாம் எந்த வயதினராக இருந்தாலும் உடல் ஆரோக்கியத்தினை பேணுவதற்கான எல்லோருக்கும் தெரிந்த ஆனால் எல்லோராலும் கைக் கொள்ளப்படாமல் இருக்கும் சில விடயங்களை குறிப்பிடுவது பொருத்தமாக அமையும்.

உணவு பழக்கமுறைகள் தேகப்பயிற்சி என்பன பொதுவான காரணிகளாக இருக்கின்றன. உணவு பழக்க முறை என்கின்ற போது உடலுக்கு எப்படிப்பட்ட உணவு தேவை என்பதினை விட நாவின் சுவைக்குரிய முக்கியத்துவம் கொடுப்பதால் இருதயநோய், நீரிழிவு போன்ற நோய்களால் பெரும்பாலானவர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றோம். இது சம்பந்தமான பல்வேறு கட்டுரைகள் எமது தமிழ் பத்திரிகைகளில் வருவதுடன் வானொலி, தொலைக்காட்சிகளில் கலந்துரையாடல்கள் நடைபெறுகின்றன. இவற்றினை நாம் வாசித்தோ கேட்டறிந்தோ. நடைமுறையில் பின்பற்றுவது அவசியமாகின்றது. உடல் ஆரோக்கியத்தில் அடுத்த முக்கிய விடயம் உடற்பயிற்சி, யோகாசனம் என்பன கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை. யோகாசனத்தால் பல்வேறுவகைப்பட்ட நோய்களை வரவிடாமல் தடை செய்ய முடியும் எனக் கண்டறியப்பட்டுள்ளது. இந்த யோகாசனம் கிழக்குத்தேச நாட்டில் இருந்து அறிமுகப்படுத்தப்பட்டாலும் இன்று வட அமெரிக்காவில் பிரபல்யம் பெற்று வருவதினை அவதானிக்க முடின்றது. இது பற்றிய தகவல்களும் தமிழ் ஊடகங்களில் இருந்து பெற முடியும்.

மன அழுத்தம் என்னும் நோய் வட அமெரிக்காவில் முக்கிய பிரச்சனையான விடயம் இதற்கு பல்வேறு காரணங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இயந்திரமயப்பட்ட வாழ்க்கை முறை, குடும்ப உறவில் உள்ள உட்பூசல்கள் என்பன பொதுவாக காணப்பட்டாலும் எமது சமூகத்தில் கலாசார முரண்பாடுகள் தாயகத்தில் உள்ள அரசியல் அவலம் என்பனவற்றில் ஒன்றோ அல்லது பலவோ ஒவ்வொருவரையும் பாதிக்கின்றது இது பற்றிய பல கட்டுரைகள் தமிழர் தகவல் சஞ்சிகையில் வந்துள்ளன வேறு வகைப்பட்ட ஊடகங்களிலும் வந்துள்ளன.

எனவே உடல் உள ஆரோக்கியத்தினை நல்ல முறையில் வைத்திருப்பதன் மூலம் எல்லா வகைப்பட்ட செல்வம் உடையவர்களாக எமது இனம் வாழ வேண்டும் என்பது எல்லோருடைய விருப்பமாக அமையட்டும்.

Sabesan's Choice!



விருது பெற்ற தொழிற்றுறை நிபுணர்

வீடு திருத்தம்
மற்றும் நிலக் கம்பளம்
பொருத்தும் வேலைகளில்
தன்னிகரற்றவர்!

சபேசன்

ஒருமுறை
தொடர்பு கொண்டால்
பலன் புரியும்!

416 605 1990



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகராஜி

## எங்களது விருப்பம் என்ன!

நிறைவடைவதையே சகலரும் விரும்புகிறார்கள், ஆனால் உங்கள் வாழ்வில் உண்மையாகவே உங்களுக்குத் தேவையானது என்ன? என்பதை அறிந்து கொள்ளா விட்டால் அதை அடைவது கடினமானதாகும் என அமைதியை உணர்தற்காக இயற்கையாக உள்ள ஆவலைப் பரிசீலித்துப் பார்க்கும்படி கேட்கும் மஹாராஜி அவர்கள் கூறுகிறார்கள்.

“மிகவும் புத்திசாலியான அரசவை ஆலோசகர் ஒருவரைக் கொண்டிருந்த பேரரசன் ஒருவர் பற்றிய கதை ஒன்றுள்ளது என அவர் கூறுகின்றார். ஒரு நாள் இந்தச் சாமர்த்தியசாலியான அரசவை ஆலோசகர் அரசவைக்கு வருவதற்குக் கால தாமதமாகியது. பேரரசர் அவர் எங்கே எனக் கேட்டுக் கோபமடைந்திருந்தார். இறுதியில் அரசவை ஆலோசகர் அரசவைக்குச் சமூகமளித்தார். பேரரசன் மிகக் கோபமாக இருந்தார். நீர் எதற்காகத் தாமதமடைந்தீர் எனக் கேட்டார்.

அப்பொழுது அந்த அரசவை ஆலோசகர் ஐயா என்னைப் பார்க்க வந்திருந்த எனது மருமகனைப் பராமரித்துக் கொண்டிருந்தேன் எனக் கூறினார்.

அப்பொழுது பேரரசன் என்னைவிட உனது மருமகன் முக்கியமானவனா? எனக் கேட்டார்.
“இல்லை ஐயா அப்படியல்ல. அவன் மிகவும் பிடிவாதமாக இருந்தான்” என ஆலோசகர் கூறினார்.

அப்பொழுது பேரரசன் “சிறு குழந்தையை எந்த ஒருவராலும் திருப்திப்படுத்த முடியும்” எனக் கூறினார்.

பேரரசே நீங்கள் அப்படிக் கூறுவதாயின் உங்களுக்கு அது சாத்தியமாகலாம். ஆனால் என்னால் அதைச் செய்ய முடியவில்லை என்றான்.

அப்பொழுது பேரரசன் நான் பேரரசன், என்னால் கொடுக்க முடியாத எந்த ஒன்றை அவன் கேட்கப் போகின்றான்? உனது மருமகனை அழைத்துவா எனக் கூறினார்.

அப்பொழுது அந்த மருமகன் வந்தான். அவன் ஏறத்தாழ ஐந்து வயதினை உடைய சிறுவனாக இருந்தான். அவனிடம் பேரரசன் உனக்கு என்ன வேண்டும்? எனக் கேட்டார்.

அப்பொழுது அந்தக் குழந்தை எனக்குக் கொஞ்சம் கரும்பு தேவை எனக் கூறியது. அப்போது பேரரசன் எந்தப் பிரச்சனையும் இல்லை என்றார். கரும்பு கொண்டு வந்து அந்தச் சிறுவனுக்குக் கொடுக்கப்பட்டது. அந்தச் சிறுவன் அழத் தொடங்கினான்.

எதற்காக அழுகின்றாய்? உனக்குக் கரும்பு தேவைப்பட்டது. அதை நான் உனக்கு தந்துவிட்டேன் எனப் பேரரசர் கேட்டார்.

“நான் எதற்காக அழுகின்றேன் என்றால், என்னால் அதைச் சாப்பிட முடியாது. அது வெட்டப்படவில்லை.” என்றான்.

அப்பொழுது பேரரசன் பிரச்சனை இல்லை என்றார். அவர் அரசவை உறுப்பினரை ஒரு பைத்தியக்காரனைப் பார்ப்பது போல் பார்த்து அந்தக் கரும்பை சீவி வெட்டி அந்தக் குழந்தைக்குக் கொண்டு வந்து கொடுக்கும்படி கேட்டார். அந்தக் கரும்பு சீவி வெட்டப்பட்டு அந்தக் குழந்தையிடம் கொடுக்கப்பட்ட போது அந்தக் குழந்தை மேலும் சத்தமாக அழத் தொடங்கியது.

அப்போது பேரரசன் இப்பொழுது என்ன வேண்டும் எனக் கேட்டார்.

அப்போது அந்தச் சிறுவன் நான் எனது மனத்தை மாற்றிக் கொண்டு விட்டேன். எனக்கு அந்தக் கரும்பு முழுசாக வேண்டும் என்றான்.

அப்பொழுது அந்தப் பையனுக்கு முழுக் கரும்பொன்றை கொண்டுவரும்படி பேரரசர் கூறினார்.

முழுக்கரும்பு கொண்டு வரப்பட்ட போது அந்தச் சிறுவன் மேலும் பலமாக அழத் தொடங்கினான்.

“இப்பொழுது நீ எதற்காக அழுகின்றாய்? நீ அதை வெட்டித் தரும்படி கேட்டுக் கொண்டாய். நாங்கள் அதை உனக்காக வெட்டித் தந்தோம். நீ உனது மனத்தை மாற்றிக் கொண்டாய், ஆகவே நாங்கள் உனக்கு முழுதாக ஒன்றைக் கொண்டு வந்துள்ளோம்.

“அந்தக் குழந்தை, இல்லை எனக்கு புதிய கரும்பு தேவையில்லை. எந்தக் கரும்பு வெட்டப்பட்டதோ அந்தக் கரும்புதான் எனக்கு முழுதாகத் தேவை எனக் கூறியது.

“அப்போது பேரரசன் குழந்தை ஒன்றைத் திருப்திப்படுத்துவது எவ்வளவு கடினமானதென்பதைத் தெரிந்து கொண்டார்.”

எப்பொழுது மக்களுக்குத் தங்களின் தேவை என்ன என்று தெரியாதுள்ளதோ அப்போது இந்த உலகத்திலும் அப்படித்தான் நடைபெறுவதாக மஹாராஜி கூறுகின்றார்.

“மக்கள் அழியும் உலகில் அழியாமையைத் தேடுகின்றார்கள் என அவர் கூறுகின்றார். அழியாமையை அவர்கள் தேடக் கூடாது. அவர்கள் அழியாப் பொருளைத் தான் தேட வேண்டும். அழியாப் பொருள் எம்முள்ளேதான் உள்ளது. அது எப்பொழுதும் அங்கே தான் இருந்தது, எப்பொழுதும் அங்கே தான் இருக்கும்.”

இந்தியாவில் தனது முதலாம் ஆண்டுக் கல்வியை ஆரம்பிப்பதற்கு முன்னரே நிறைவடைவதற்கான முக்கியத்துவம் பற்றி உரையாற்றத் தொடங்கிய மஹாராஜி அவர்கள் தனது 13 ஆவது வயதில் மேலைத்தேயத்திற்கு வந்ததில் இருந்து 50 இற்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 10 மில்லியனுக்கும் மேற்பட்ட மக்களுக்கு உரையாற்றியுள்ளார். அவர் தான் வழங்கும் விடயம் சொற்களுக்கு அப்பாற்பட்டது எனக் கூறுகின்றார்.

“உங்களுக்கு நிறைவு தேவையாயின் அதை உணருங்கள் என அவர் கூறுகின்றார். அது சாத்தியமானதொன்றுதான். உங்களுக்கு உங்கள் வாழ்வில் அமைதி தேவையாயின் உங்கள் வாழ்வில் உங்களால் அமைதியைப் பெற்றுக் கொள்ள முடியும்.”

மஹாராஜியின் செய்தி வெறும் வார்த்தைகள் அல்ல. ஆர்வமுள்ளவர்களுக்கு அவர் செயல்முறையில் இதயத்தில் உள்ள அமைதியை அனுபவிக்கும் வழியைக் கற்றுக் கொடுக்கிறார். இது அவருடைய அன்பளிப்பாக வழங்கப்படுகிறது. அவர் வழங்கும் இந்த வழிமுறையை பெறுவதற்கு “சாவிகள்” என்று அவர் அழைக்கும் டிவிடி-க்களைப் பார்ப்பதன் மூலம் ஒருவர் தன்னைத் தயார் செய்து கொள்ளலாம்.

இவற்றைப் பற்றிய விளக்கங்களை “மேலும் அறிந்து கொள்ளுதல்” என்ற டிவிடி அல்லது பதிப்பீடு மூலமாகப் பெற்றுக் கொள்ளலாம். இதை இலவசமாக தபாலில் பெறத் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் 416-431-5000

1-877-707-3223 Toll Free
e-mail: wordsofpeace@sympatico.ca
www.tprf.org
www.wordsofpeace.ca


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பெப்ரவரி இதழ் தொடர்ச்சி)

டாக்டர் அ. சண்முகவடிவேல்

# தலப் பயணம்...2



சிதம்பரத்திலிருந்து அதிகாலையிலேயே புறப்பட்டு மதுரையை நோக்கி எமது தலப் பயணம் தொடர்ந்தது. வீதிகளில் வண்டிகள் குறைவாகவேயிருந்தன. மார்கழிக் காட்சியாதலால் எங்கும் பனிப்புகார் வீதியை மறைத்துக் கொண்டிருந்தது. நாம் பயணம் செய்யும் வழியில் சோழச் சக்கரவர்த்தி இராஜராஜன் அமைத்த தஞ்சை பெருவுடையார் திருக்கோயிலுக்கு சென்று வழிபட்டோம். கட்டட நிர்மாணக் கலையிலும் சிற்ப வேலைகளிலும் உலகப் புகழ் பெற்ற தலமாக இராஜராஜேஸ்வரம் திகழ்கிறது. கருவறையிலுள்ள ஒன்பது அடி உயரமுள்ள இலிங்கம், விமானம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், முக மண்டபம், நந்தி மண்டபம் என்பன இத்திருக்கோயிலின் சிறப்பம்சங்களாகத் திகழ்கின்றன. இந்திய புதைபொருள் ஆராய்ச்சியினரால் இத்தலம் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. கருவூர் தேவரின் திருவிசைப்பா பாடல் பெற்றது இத்தலத்தின் வேறொரு சிறப்பாகும்.

மதுரையில் செந்தமிழ் செல்வர் முனைவர் ச. சாம்பசிவனார் முயற்சியில் எமக்கு சோமசுந்தரம் குடியிருப்பு திருவள்ளுவர் மன்றத்தில் வரவேற்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதற்கு தவத்திரு அ.வே. சாந்திகுமார் சுவாமிகள் தலைமை தாங்க கலாநிதி சாம்பசிவனார், சு.பாலகிருஷ்ணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தருமை ஆதீனப் புலவர் நீசீ. சுந்தரராமனின் சைவசித்தாந்த உரையும் யோகானந்த அடிகளின் ஏற்புரையும் இடம்பெற்றன.

மறுநாள் காலை உணவின் பின்பு சித்தாந்த சபரம் முனைவர் ஆ.ஆனந்தராஜன் அவர்கள் இல்லத்தில் சைவசித்தாந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டோம். சுமார் மூன்று மணித்தியாலங்களில் சைவசித்தாந்தம் என்ற பொருள் பற்றி மிகவும் எளிமையாகவும் தெளிவாகவும் எடுத்துக் கூறினார்.

உலகில் உள்ள பொருட்கள் அனைத்தும் பதி, பசு, பாசம் என்பனவற்றுள் அடங்கும். பதி என்றால் இறைவன், எம்மைக் காப்பவன். பசு என்பது உயிர், காக்கப்படுபவர், கட்டுப்பட்டிருப்பவர். பாசம் என்றால் கட்டு, கயிறு, தளை. பாசத்தை பசுக்கள் விட்டு பதியினையடைவதே முத்தி எனக் கூறப்படுகிறது. பதி, பசு, பாசத்தைப் பற்றியும் அவைக்கிடையிலுள்ள தொடர்புகள் பற்றியும் முத்தி பெறுவது பற்றியும் விளக்குவதே சைவசித்தாந்தம்.

பதி ஒன்று. பசுக்கள் பல. பதியும் பசுக்களும் சித்து அல்லது அறிவுள்ள பொருட்கள். பதி தானே அறிகின்றது. பசு அறிவித்தால், ஒன்று ஒன்றாக அறிகிறது. ஒவ்வொரு உயிரும் அல்ல ஆன்மாவும் அறிவிலே வேறுபடுகிறது. நான், எனது என்று தன்னை நோக்கி அறிகின்ற அறிவே உயிர். அறிவினால் அனுபவம் உண்டாகிறது. இறைவனின் திருவடியே அவனின் ஞானசக்தி. அவனின் இச்சா சக்தியே உயிர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற கருணையாக உள்ளது.

பாசம் சடப் பொருளாகும். ஆணவம், கன்மம், மாயை என மூன்றாக உள்ளது. ஆணவம் என்பது இருள் போன்ற ஒரு பொருள். உலகத்தில் நாம் பார்க்கும் இருள் புற இருளாகும். ஆணவ இருள் எமக்கு அநாதியாக உள்ளது. உயிரை ஆணவம் மறைத்து அணுத்தன்மைப் (சிறுமை) படுத்துகிறது. ஆணவத்தால் வருவது அஞ்ஞானம், அறியாமை. அறிவினால் வருவது இன்பம். துக்கத்திற்குக் காரணம் ஆணவம். அதனால் வருவது கன்மம். கன்மத்தால் வருவது உலக அனுபவம். அதுவே ஆணவத்திற்கு மருந்தாகவும் அமைகிறது. நம்மால் ஆவது ஒன்றுமில்லை என்ற உண்மை புலப்படுகிறது. ஆணவ வலிமை குன்றுதலின் விளைவாக இறைவனின் திருவருள் வெளிப்படுகிறது. இத்திருவருள் மேலோங்குகின்ற பொழுது இறைவனின் மறைப்புச் சக்தி அருள் சக்தியாக வெளிப்படுகிறது. ஆன்மாவின் இயல்பிற்கு ஏற்ப திருவருளாகிய தாய் சிறிது சிறிதாக ஞானத்தைச் சேர்கிறாள். ஆன்மா எல்லாவற்றையும் அறியும் நிலை ஏற்படுகிறது. எமது பிறவியின் நோக்கமே அறியாமையை நீக்கி ஞானத்தைப் பெற்று இறைவனை அடைதலே. எனவே ஆன்மா தன்னைப் பற்றியும் இறைவனைப் பற்றியும் உள்ளவாறு அனுபவமாக அறிகிறது. இறைவன் தந்தாலன்றி ஞானத்தை நாம் பெற முடியாது. பெரியாரின் வகுப்பு முடிந்ததும் அவரின் சில நூல்களையும் பெற்றுக் கொண்டோம். எங்களின் சைவ உணர்வையும் சைவ தத்துவத்தை அறிவதில் காட்டிய ஆர்வத்தையும் அவர் மெச்சத் தவறவில்லை.

பின்பு மதுரை நகரின் வடக்கே சுமார் 2 கி.மீற்றர் தூரத்தில் அழகர் மலை மேல் அமைந்துள்ள முருகப் பெருமானின் ஆறாவது படை வீடான பழமுதிர்சோலை என்றும், சோலை மலை, குல மலை, குலகிரி என்று வழங்கப்படும் தலத்திற்குச் சென்றோம்.

சங்கத் தமிழர் இலக்கியங்கள், பரிபாடல், சிலப்பதிகாரம், பத்துப் பாட்டு, திருமுருகாற்றுப்படை, திருப்புகழ், கந்தபுராணம் என்பன இத்தலத்தின் சிறப்புகளைக் கூறுகின்றன. இத்தலப் பெருமானை "மலைக் கிழவோன்", மலைக்கு உரிமையுடையோன் என நக்கீரர் போற்றிப் பாடியுள்ளார். இங்கு எம்பெருமான் நிகழ்த்திய திருவிளையாடல் பழம் உதிர்த்த திருவிளையாடலாகும். முருகனாகிய மாட்டுக்காரச் சிறுவன் நாவல் மரம் மீது ஏறிக் கிளையில் அமர்ந்து நிழலில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த ஒளவையை நோக்கி "சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?" என்ற கேள்வியை கேட்டது இங்குதான். இந்த நாவல் மரம் ஏனைய மரங்கள் பழுக்கும் காலத்தில் பழுக்காது. ஆண்டு தோறும் கந்தசஷ்டி மாதமாகிய ஐப்பசித் திங்களில் பழுக்கிறது.

அடுத்து நாம் மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலுக்குச் சென்று துதித்தோம். "நான்மாடக் கூடல்" என்று நான்கு பெரிய வானளாவிய கோபுர வாயில்களையும், விமானங்களையும், மண்டபங்களையும், சிற்பத் திருவுருவங்களாலும் பொலிவுற்று விளங்குகின்றது இத் தலம். அங்கயற்கண் அம்மை பாண்டியனின் வளர்ப்பு மகளாக சோமசுந்தரரைத் திருமணம் செய்து அரசு செய்த இடம் மதுரை மாநகர். சொக்கநாதப் பெருமான் திருவிளையாடல்களை நடத்தி பாண்டிய நாட்டை சிவலோமாக்கியதும் இங்கே தான். இத்திருத்தலத்திற்கு சிவநகரம், கம்பவனம், கன்னியாபுரம், பூலோகசிவலோகம் என்ற பெயர்களுண்டு.

→



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R&S Auto Sales

Top Quality Used Car Dealer

வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட வாகனங்களை விற்பது எங்கள் விசேட திறன்!

28 ஆண்டுகள் அனுபவம்!



RADHA

HONDA
TOYOTA
GM-MINI VANS



ON THE SPOT FINANCING

4362 Sheppard Ave. East at Brimley

Tel: 416 412 3838

# சிறுவர்களின் தூக்கம் குறைந்தால் எடை அதிகரிக்குமாம்

புதிய ஆராய்ச்சியொன்றின்படி, குறைந்த தூக்கம் கொள்ளும் சிறுவர்களின் எடை உயரும். மாற்றம் உடனடியாக தெரியாதுவிடினும், உடல் எடையில் மாற்றம் காணப்படும். ஆறாம் வகுப்பில் இருக்கும் பிள்ளையின் சராசரி தூக்கம் 8.5 மணித்தியாலங்களுக்குக் குறைந்தால், 23% எடை உயர வாய்ப்பிருக்கிறது. அதேசமயம், அவர்களுடன் ஒத்த வயதுடைய பிள்ளைகள் சராசரியாக 9.25 மணி நேரத்திற்கும் கூடுதலாக தூங்கினால், அவர்களில் 12% அளவிலேயே எடை கூடுவதற்கு வாய்ப்புண்டு.

மூன்று காரணங்களால் தூக்கம், உடல் எடையைப் பாதிக்கக் காரணியாகலாம் என Dr.Julie Lumeng என்னும் மிச்சிகன் பல்கலைக்கழக துணை ஆராய்ச்சியாளர் கூறுகின்றார். அவையாவன: முதலாவதாக, போதியளவு நித்திரையில்லாதுவிடின், பகலில் அவர்களின் ஆட்டம், ஓட்டம், விளையாட்டு என்பன குறைவாக இருக்கும். உடல் பயிற்சியும் குறைவாக இருக்கும். இரண்டாவதாக, அவர்கள் களைத்திருக்கையில், அமைதியற்றவர்களாகவும், அடிக்கடி junk food எனப்படும் எண்ணெய் சேர்ந்த ஆரோக்கியமற்ற உணவுகளை நாடுவர். கடைசியாக, உடலில் உள்ள கொழுப்புகள் பாவிக்கப்படும் முறையும் பாதிக்கப்படும்.

பெரியவர்களில் இது சம்பந்தமான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு, பெறுபேறுகள் தூக்கக் குறைவு, லெப்ரின், இன்சுலின் ஆகிய ஹோர்மோன் சுரப்புகளில் தாக்கத்தை ஏற்படுத்துவதன் மூலம் பசி, சக்தி எரிப்பு போன்றவற்றில் பாதிப்பை ஏற்படுத்துவதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## சர்க்கரை..

ஒரு நீரிழிவு நோயாளிக்குத் தேவையான உணவு பற்றிய பொதுவான தகவல்கள் இவை. எனினும் நீரிழிவு நோய் கண்ட ஒருவர் தனக்கான ஒரு உணவுத்திட்டத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். குடும்பநல மருத்துவரின் உதவியுடன் ஒரு உணவியலாளரின் (dietitian/ nutritionist) ஆலோசனையைப் பெற்று தனக்கேற்ற நாளாந்த உணவுத்திட்டத்தைத் தயாரித்துக் கொள்ளலாம். ஒரு நோயாளியின் வயது, பால், உடல் நிறை, செய்கின்ற தொழில் நீரிழிவு நோயின் வகை போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு அவருக்குத் தேவையான சக்தியின் அளவைக் கணக்கிட்டு ஒரு உணவுத்திட்டத்தை தயாரிக்க அவர் உதவுவார். இனி வரும் இதழ்களில் உடற் பயிற்சி, தாமாகவே வீட்டில் குருதிப் பரிசோதனை செய்து கொள்வது போன்ற நீரிழிவு நோயுடன் சம்பந்தப்பட்ட இதர பல தகவல்கள் பற்றி ஆராய்வோம்.

## தலப் பயணம்..

இத்திருக்கோயிலில் முதலில் மீனாட்சி அம்மனுக்குத் தான் வழிபாடு நடைபெறுவது வழக்கம். இதன் தெற்குக் கோபுரமே மிகவும் உயரமானது. இத்தலத்தில் அட்டசக்தி மீனாட்சி நாயக்கர் மண்டபம், முதலிப்பிள்ளை, ஊஞ்சல், கிளிக்கூட்டு, கம்பத்தடி, வீரவசந்தராயர் ஆயிரங்கால், மங்கையர்கரசி, வேர்வைகாரர் என பல மண்டபங்களும் பொற்றாமரை குளம், சுவாமி கோயில், முக்குறுணிப் பிள்ளையார் திருவுருவம், கடைச்சங்கப் புலவர்கள், நால்வர்கள், அறுபத்து மூவர் ஆகியோரின் திருவுருவங்களும் உள்ளன. இத்திருத்தலத்தின் வெள்ளியம்பலத்தில் கால் மாறி ஆடிய கூத்தபிரான் திருவுருவமும் உள்ளது.

அன்று மாலை 7 மணியளவில் முருகப் பெருமானின் ஆறுபடை வீடுகளில் முதலாவதாகக் கருதப்படும் திருப்பரங்குன்றம் என்னும் தலத்தைத் தரிசிக்கச் சென்றோம். இத்திருக் கோயில் மதுரையிலிருந்து 8 கி.மீற்றர் தூரத்திலுள்ளது.


இத்தலத்தின் சிறப்புகள் பற்றி திருஞானசம்பந்தர், சுந்தரரின் அருணகிரிநாதரின் பாடல்களிலும் திருமுருகாற்றுப்படை, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு ஆகிய நூலகளில் காணலாம்.

இந்திரனின் வாகனமாகிய ஐராவதம் என்னும் யானையால் வளர்க்கப்பட்ட தெய்வயானையை (தேவகுஞ்சரி) தேவசேனாதிபதியாகிய முருகப் பெருமான் மணந்த திருக் கோலத்தில் இத்தலத்தில் காட்சியளிப்பதைக் காணலாம். இக்கோயிலின் வாயிலுள்ள சுந்தரபாண்டியன் மண்டபம் பல சிற்பங்களைக் கொண்டு விளங்குகின்றது. கருவறையை அடைவதற்குப் பல படிகளை ஏறி மேலே செல்ல வேண்டும். இத்தலத்திலேயே சிவலிங்க உருவக அமைப்பில் உள்ள குன்றமும் அதன் அடிவாரத்தில் சரவணப் பொய்கையும் நக்கீரர் கோயிலும் உமையாண்டவர் கோயிலுமுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னும் 19 வருடங்கள் பின்னும் நெஞ்சை வருடும் நினைவுகள்!



தனயனாக
05.05.1970

தந்தைக்காக
10.05.1989


## செல்வன் எஸ். தி. அகிலன்

யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி மாணவர் தலைவன்
விளையாட்டு வீரன்; கல்லூரி கிரிக்கெட் அணித் தலைவன்

அமைதிப்படை என்று வந்த இந்திய இராணுவத்தினாலும்
அவர்களின் கூலிப்படைகளாக இயங்கிய துரோகிகளாலும்
பத்திரிகைச் சுதந்திரம் காக்கப் போராடிய தந்தைக்காக
பழிவாங்கப்பட்ட இளவலுக்கு இதய வணக்கம்!

அகிலனே!
கண்களின் முன்னே ஒரு கண்ணனாக
பத்தொன்பது வருடங்கள்!
கண்களுக்குள்ளே மணிகளாக இன்னொரு
பத்தொன்பது வருடங்கள்!
இன்றுடன் உந்தன் முப்பத்தெட்டு வயதை
நினைத்துப் பார்க்கின்றோம்!
எத்தனை விழுமியங்களை, உன் வித்துக்களை
எங்கள் மண் வியாபித்திருக்கும் என
வேரோடுகிறது நினைவுகள்!
அகிலா! அதே பத்தொன்பது வயது
இளவலாகவே உன்னை எம் நெஞ்சம்
இன்றும் வருடுகின்றதையா!

அம்மா, அப்பா
குடும்ப உறவினர்கள், நண்பர்கள்
416 920 9250

**Jude**
**Anthonypillai** LL.B. (Canada)
Barrister, Solicitor & Notary Public
Former Asst. Crown Attorney

**Phone**
**416 332 8547**

**யூட் அந்தோனிப்பிள்ளை**
கனடிய வழக்கறிஞர்
முன்னாள் அரச வழக்கறிஞர்

தொலைபேசி
416 332 8547

தொலைநகல்
416 332 8379

2390 Eglinton Ave. East
Suite 259
Scarborough ON
M1K 2P5




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கணேஷ துர்க்கா தேவஸ்தானம்

# SRI GANESHA DURGA HINDU TEMPLE OF MISSISSAUGA







**தொடர்புகளுக்கு:**

'ஸ்ரீ விஜயலெட்சுமி வாசா அதிபர்', 'சிவாகம கிரியா பூஷணம்'

## சிவஸ்ரீ. பஞ்சாட்சர கிருஷ்ணராஜ குருக்கள்

(ராஜன் குருக்கள்)

கனடிய திருமணப்பதிவு அதிகாரி, இந்துமதகுரு, புங்குடுதீவு - 10ஆம் வட்டாரம்

ஆலயப் பிரதமகுரு, ஆலய ஸ்தாபகர், முதல்வர் - அறங்காவலர் சபை

**7220 Tranmere Drive**

**Mississauga, ON. L5S 1L6**

**TEL: 905-405-0011 / 905-501-0011**

**www. sriganeshadurga.com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**NLR ACCOUNTING AND TAX SOLUTIONS**

Personal Tax Returns
Corporate Tax Returns
Book-keeping
RST, GST, Payroll service

E-File
confidential
friendly and
fast service

Phone
**416 888 1128**
**416 492 7973**

Location

2525 Pharmacy Av.
Pharmacy Av & Finch Av. East
(Inside Universal Textiles)

NLR

# பெண்கள் சாரதிகளாவதற்கு நீண்ட காலம் தேவைப்பட்டுள்ளது!

ஏறத்தாழ 100 வருடங்களுக்கு முன், பெண்கள் வாகனமோட்டுவதற்கு உடல்ரீதியாக உறுதியானவர்கள் அல்ல என்ற நிலைப்பாடு காணப்பட்டது. அக்காலகட்டத்தில் அமெரிக்கா முழுவதிலுமே 200,000 கார்கள் வரையே காணப்பட்டதுடன், கார்களை ஸ்ராட் பண்ணுவதற்கு கை இயக்கி பாவிக்க வலு தேவைப்பட்டது.

1911 ஆண்டளவில் மின்சார ஸ்ராட்டர் கண்டுபிடிக்கபட்ட பின், நிலைமை மாறத் தொடங்கியது. 1920 ஆண்டளவில் பெண்கள் எவ்வளவு இலகுவாக கார்களை ஓட்டலாம் என பெருமளவில் விளம்பரப்படுத்தப்பட்டது.


இன்று, வட அமெரிக்காவில் 200 மில்லியனுக்கும் அதிகமான அனுமதிப்பத்திரம் பெற்ற சாரதிகள் உள்ளனர். இவர்களில் ஏறத்தாழ அரைவாசிப்பேர் பெண்கள்.

---

# உங்கள் வேகத்தை கவனிக்கவும்!

'Watch Your Speed' என்னும் செயற்திட்டம், நகரத்தின் மற்றைய வீதிகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. வருடம் முழுவதும் இச்செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இத்திட்டமானது, வாகன ஓட்டுனர்களின் வேகங்களை காட்டக் கூடியதான பெரிய பதாகைகளை அல்லது போர்டுகளை பயன்படுத்துகின்றது. இதன் மூலம் ஓட்டுனர்கள் தமது வாகனத்தின் வேகத்தை அவதானித்து, நிதானித்து ஓட்டுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நகர முழுவதும் பல இடங்களில் மாறி மாறி இவை வைக்கப்படுகின்றன. உள்ளூர்வாசிகளினதும், போக்குவரத்துச் சேவை வழங்குனர்களினதும், பொலிஸ் அதிகாரிகளினதும் பரிந்துரைகளுக்கு ஏற்ப இடங்கள் தெரிவு செய்யப்படுகின்றன. இந்தப் பதாகை, வேகத்தை காண்பிப்பதற்கு மட்டுமே பாவிக்கப்படுகின்றது, ரிக்கற் வழங்குவதில்லை.




"ஆசை, ஆசை இப்பொழுது
பேராசை இப்பொழுது
ஆசை தீரும் காலம் எப்பொழுது?"

வீடு வாங்கும் உங்கள்
ஆசைகளை நிஜங்களாக்கிவிட
இன்றே அழையுங்கள்...

"Honesty, Integrity, Professionalism"

சாள்ஸ் தேவசகாயம் M.A
Sales Representative
**Direct: 416-284-5555**
24Hrs: 416-284-4751
880 Ellesmere Rd., Suite 203
Scarborough. Ont. M1P 2W6

ROYAL LEPAGE
Connect Realty, Brokerage
INDEPENDENTLY OWNED AND OPREATED






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• Loans • Mortgages • Insurance Claims • Traffic Tickets •

Scholarship Plan [RESP]

**JRB Universal Inc.**

Almost All Services Available

B: 416 752 7555
C: 416 937 9081



**R.R. Rajkumar**
B.Com (Hons), M.B.A.

Any Referral Service

• Credit Counseling • Accounting & Tax Services •


# ஆலய சன்னிதானங்களில்

## கனடா றிச்மன்ட்ஹில் இந்து ஆலயம்

வட அமெரிக்காவின் 'பெரிய கோயில்' என அழைக்கப்பெறும் றிச்மன்ட்ஹில் ஆலயம் திங்கட்கிழமையிலிருந்து வியாழக்கிமை வரையும் காலை 8:00 மணி முதல், பகல் 1:30 மணி வரையும், பின்னர் பிற்பகல் 5:30 மணியிலிருந்து இரவு 9:00 மஸி வரையும் திறந்திருக்கும். வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் மற்றும் விடுமுறை தினங்களிலும் காலை எட்டு மணி தொடக்கம் இரவு ஒன்பது மணி வரையும் திறந்திருக்கும். இரவு 9:30 மணிக்கு ஆலயம் மூடப்படும். ஆலய நிகழ்ச்சிகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் 905 883 9109 தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம்.

## மிசிசாகா ஸ்ரீகணேச துர்க்கா ஆலயம்

மிசிசாகா 7220 Trammere Driveல் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஸ்ரீகணேச துர்க்கா இந்து ஆலயத்தில் தினசரி மூன்று காலப் பூஜைகளும் சிறப்பாக இடம்பெற்று வருகின்றது. செவ்வாய்க்கிழமைகளிலும் வெள்ளி முதல் ஞாயிற்றுக்கிழமைகளிலும் சிறப்பு பூஜைகள் நடைபெறுகின்றன. கிரியா வழிபாடுகளாலும், திருமணச் சடங்குகளாலும் வடஅமெரிக்கா முழுவதும் நன்கு பிரபல்யமான சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜ குருக்கள் (ராஜன் ஐயா) அவர்களே இந்த ஆலயத்தை நிறுவியுள்ளார். இதன் பிரதம குருக்களும், அறங்காவல் சபையின் முதல்வரும் இவரே. ஆலய தொலைபேசி இலக்கம் 905 405 0011. ஸ்ரீவிஜயலட்சுமி வாசாவின் தொலைபேசி இலக்கம் 905 501 0011.

## ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலயம்

ஸ்காபரோ கென்னடி வீதியில் 3025ம் இலக்கக் கட்டிடத்தில் யுனிட் இலக்கம் 10 இல் (பிஞ்ச் வீதிக்கும் மக்னிக்கல் வீதிக்கும் இடையில், சன் பிளவர் பேணிச்சர் நிறுவனத்துக்கு முன்னால்) ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலயம் அமைந்துள்ளது. ஆலயத்தில் தினசரிப் பூஜைகளுடன், முக்கிய தினங்களில் விசேட வழிபாடுகளும் இடம்பெறுகின்றன. வாராந்தம் வெள்ளிக்கிழமைகளில் இரவுப் பூஜையின் பின்னர் சுவாமி உள்வீதி வலம் வருதல் இடம்பெறுகின்றது. ஆலயத்தின் வழமையான மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகள் உட்பட மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் 416 291 8500 இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.


நான் ஒரு வழக்கறிஞர் இல்லை

Motor Vehicle Accident

Criminal

வாகன விபத்து!

கிறிமினல்!

உங்கள் கணிப்பு தவறாகலாம்..

உரிய



சட்ட ஆலோசனைகளுக்கு

கலகலப்பு தீசன்

416-803-5296


WWW.KALAKALAPPU.NET





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றீமாக்ஸ் - கனடாவில் அதிக வீடுகளை விற்பனை செய்வது தமிழர்களில் அதிகூடிய வீடுகளை விற்பவர்கள் றஜீவும் சசியும்!







றீமாக்ஸ் வீடு விற்பனை நிறுவனத்தின் வருடாந்த விருதுகள் வழங்கும் வைபவம் கடந்த மாத நடுப்பகுதியில் நடைபெற்றது. இங்கு வழங்கப்பட்ட இரண்டு உயர் விருதுகளை றஜீவ் கோணேஸ்வரன், சசி குணரட்ணம் ஆகியோர் பெற்றனர். Hall of Fame மற்றும் Platinum Club ஆகிய இரு உயர் விருதுகளையும் றஜீவ் கோணேஸ்வரன் தமதாக்கிக் கொண்டார். 100% Club என்னும் உயரிய விருதினை சசி குணரத்தினம் தட்டிக் கொண்டார். இவர்கள் இருவரும் 'ரீம் மக்ஸ்புறோஸ்' என்னும் குழு விற்பனை நிலையம் ஊடாகத் தமது வீடு விற்பனை வணிகத்தை மேற்கொண்டு வருகின்றனர்.


On behalf of
the **Ontario Liberal Caucus**
best wishes to the community on the occasion of

## South Asian Heritage Month



Hon. Dalton McGuinty
Premier of Ontario
416-325-7200

Lorenzo Berardinetti
Scarborough Southwest
416-261-9525

Hon. David Caplan
Don Valley East
416-494-6856

Bob Delaney
Mississauga-Streetsville
905-569-1643

Linda Jeffrey
Brampton Centre
905-495-8030

Amrit Mangat
Mississauga-Brampton South
905-696-0367

Yasir Naqvi
Ottawa Centre
613-722-6414

Hon. George Smitherman
Toronto Centre
416-972-7683

Hon. Kathleen Wynne
Don Valley West
416-425-6777

Bas Balkissoon
Scarborough-Rouge River
416-297-5040

Hon. Margarett Best
Scarborough-Guildwood
416-281-2787

Hon. Michael Chan
Markham-Unionville
905-305-1935

Dr. Helena Jaczek
Oak Ridges-Markham
905-294-4931

Dr. Kuldip S. Kular
Bramalea-Gore-Malton
905-799-3939

Reza Moridi
Richmond Hill
905-884-8080

Dr. Shafiq Qaadri
Etobicoke North
416-745-2859

Hon. Harinder Takhar
Mississauga-Erindale
905-828-8989


Authorized by Ontario Liberal Caucus




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**The Children's Education Trust of Canada**
**offered to the public by**

**Children's Education Funds Inc.**



10 டாலரிலிருந்து ஆரம்பித்து
7200 டாலர்கள் வரை
கனடா அரசாங்கம் வழங்கும்
நன்கொடையைப் பெற்று
(20 வீத Grant)
உங்கள் பிள்ளைகளதும்
பேரப்பிள்ளைகளதும்
கல்வி வாய்ப்பை
ஊக்குவியுங்கள்.

**சமூக நம்பிக்கையையும்
நன்மதிப்பையும் பெற்ற**

சிவா
கணபதிப்பிள்ளை

**அவர்களை அழைத்து
விபரங்களைப் பெறுக!**

Siva Kanapathypillai
Branch Manager

**416 438 0660, 416 438 3578
416 899 6044**
**இல்லத் தொலைபேசி:**
**905 472 1139**
**email**
**s.kanapathypillai@cefi.ca**

# யாழ். மறைமாவட்ட ஆயருக்கு ரொறன்ரோவில் வரவேற்பு

கடந்த மாதம் குறுகிய விஜயமொன்றை மேற்கொண்டு கனடா வந்திருந்த யாழ். மறை மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகைக்கு ரொறன்ரோ கத்தோலிக்க மக்களால் அடக்கமான முறையில் சிறப்பு வரவேற்பு வழங்கப்பட்டது. ரொறன்ரோவில் அமைந்துள்ள தமிழ் கத்தோலிக்க தேவாலயத்தில், பேராசிரியர் வணபிதா ஜோசப் சந்திரகாந்தன் தலைமையில் இந்த வரவேற்பு அளிக்கப்பட்டது. வைபவத்தில் எடுக்கப்பட்ட சில ஒளிப்படங்களை இங்கு காணலாம்.















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DR. ILLANGO & ASSOCIATES

*Dental Office*

BRACE FOR A GREAT SMILE

DR. ILLANGO & ASSOCIATES

பல் சிகிச்சையில் சகல துறைகளிலும்
எமது சேவை

## DR. M. ILLANGO

B.D.S. Dip.Orth (Oslo).General Practioner Mainly Orthodontics
கிளிப் போடும் வேலை

## DR. MEHRAN MOJGANI

D.D.S. Dip. Perio.Gum Specialist
பல்முரசு வைத்திய நிபுணர்

## DR. SABAPATHY RAVEENDRAN

B.D.S.M.S.F.D.SR.C.S (Eng). General Practioner (Mainly Oral Surgery)
(அறுவைச் சிகிச்சையில் இலங்கையிலும் இங்கிலாந்திலும் நிபுணத்துவம் பெற்ற பல்வைத்தியர்)

## DR. ALI ADIPBFAR


D.D.S.M.D.F.R.C.D (C). Plastic Surgeon
(Wisdom tooth extraction under sedation)
மயக்கமாக்கி ஞானப்பற்கள் அகற்றுபவர்

## DR. JANAKI ILLANGO


B.D.S. குடும்ப பல் வைத்தியர்

## Dr. LAI YUNG CHEONG

B.D.S. குடும்ப பல் வைத்தியர்




**SCARBOROUGH OFFICE**
3852 Finch Ave. East, Units 204, 303
Scarborough, ON
**(416) 292-7004**





**MISSISSAUGA OFFICE**
3025 Hurontario St., # 102
Mississauga, ON
**(905) 270-7844**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1206-0585


ஓம்

# ஸ்ரீகௌரி மங்கள சேவை



அனைத்து இந்து மத கிரியைகளுக்கும்
கனடிய திருமண பதிவு அதிகாரி, இந்து மதகுரு

## சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள்

(ஐயாமணி) புங்குடுதீவு-10
ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய பிரதம குரு

திருமணம், திருமணப் பதிவு
புதுமனை புகுதல்
கடை திறப்பு வைபவம்
புண்யாக வாசனம்
பூப்புனித நீராட்டு விழா
பூமாலை, ஆண்டாள் மாலை
சடை நாகம்
தலை நகை முழுவதும்
முத்து மணவறை

தலைப்பாகை
பந்தல் அலங்காரம்
கல்யாண பூசைப் பொருட்கள்
முத்துச் சப்பரம்
ஆலயத் திருவிழா
ஆலய வைபவங்கள்
ஆகிய அனைத்துக்கும்
எப்போதும் எம்முடன்
தொடர்பு கொள்ளுங்கள்

**416-266-3333**


628 E Birchmount Road
Scarborough, Ontario. M1K 1P9

ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய தொலைபேசி இலக்கம் 416-291-8500

# NKS Draperies & Blinds

**210 Silver Star Road, Unit. 825**
**(Midland & Finch) Scarborough, ON**

**416 321 6420**





- **Vertical blinds**
- **Venetian blinds**
- **Draperies**
- **Curtains**
- **Shutters**

உங்கள்
இல்லங்களை
மாளிகையாக்கிட

அழையுங்கள்
கேதா

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org